இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 189 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 07 – திங்கள்கிழமை 19 பிப்ரவரி 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 189 : Thiruvalluvar Year - 2055 - Maasi 07 - Monday 19 February 2024 - Trichi ★★ 12 Pages ₹ 5.00




## சிறுபான்மையினரின் நலனைப் பாதுகாப்பதில் முன்னோடி அரசாக நமது அரசு உள்ளது!

# ‘திராவிட மாடல்’ யாரையும் பிரிக்காது; பிளவுபடுத்தாது!

## சிறுபான்மையினர் நலன் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி !

**சென்னை, பிப்.19 -**

**“திராவிட மாடல்” என்பது எவரையும் யாரையும் பிரிக்காது, பிளவுபடுத்தாது, உயர்வு தாழ்வு கற்பிக்காது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிறுபான்மையினர் நலன் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றும்போது உறுதிபடக் கூறினார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.02.2024) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சிறுபான்மையினர் நலன் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:–

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் இந்த ஆய்வுக்கூட்டத்தின் வாயிலாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நாம் எப்போதோ ஒருமுறை சந்திப்பவர்கள் அல்ல, அவ்வப்போது சந்தித்துக் கொண்டே இருப்பவர்கள்தான்.

சந்தித்து கோரிக்கை வைத்தால்தான் நிறைவேற்றப்படும் என்பதாக இல்லாமல், நீங்கள் என்ன வேண்டும் என்று சிந்திக்கிறீர்களோ, அதனைச் செயல்படுத்தித் தரும் ஆட்சியாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எப்போதும் இருந்துள்ளது.

அனைவரையும் உள்ளடக்கிய, எல்லார்க்கும் எல்லாம் வழங்கும் ஆட்சியாக திராவிட மாடல் ஆட்சி அமைந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். ‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற வார்த்தைக்குள் பெரும்பான்மையும் உண்டு, சிறுபான்மையினரும் உண்டு. அனைவரும் உண்டு. ‘திராவிட மாடல்’ என்பது எவரையும் யாரையும் பிரிக்காது, பிளவுபடுத்தாது, உயர்வு தாழ்வு கற்பிக்காது.

இன்றைய தினம் நாளிதழ் ஒன்றில், பேட்டி அளித்துள்ள ஒன்றிய அமைச்சர் ஒருவர், ‘பிரிவினையைத் தூண்டுகிறது திராவிட மாடல்’ என்று சொல்லி இருக்கிறார். இதைவிடச் சிறந்த நகைச்சுவைப் பேட்டி இருக்க முடியாது.

### பிறப்பால் பேதம் பார்ப்போர், நம்மை ‘பிரிவினை வாதிகள்’ என்பதா?

பிறப்பில் பேதம் பார்க்கும் சித்தாந்தத்துக்குச் சொந்தக்காரர்களான அவர்கள், நம்மைப் பார்த்து பிரிவினைவாதிகள் என்று சொல்வதுதான் வேடிக்கையாக உள்ளது. அனைவருக்கும் அனைத்தையும் கிடைக்கச் செய்யும் ஆட்சிதான் திராவிட மாடல் ஆட்சியாகும்.

அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கக் கூடாது என்று சொல்லும் அவர்கள் தான் பிரிவினைவாதிகள். இந்த வரிசையில் சிறுபான்மை யினரின் நலனைப் பாதுகாப்பதிலும், மேம்படுத்துவதிலும் முன்னோடி அரசாக நமது அரசு உள்ளது. குறிப்பாக முஸ்லிம் சமுதாய மக்களுக்கு உரிய வாய்ப்பை வழங்குவதன் மூலமும், அவர்களின் சட்டப்பூர்வ உரிமைகளை உறுதி செய்து, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலமும் சிறுபான்மையினரின் சமூக,பொருளாதார மேம்பாட்டிற்கு இந்த அரசு தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகிறது.

### சிறுபான்மையினர் நலனுக்கான– கழக அரசின் திட்டங்கள்!

சிறுபான்மையினர் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் இவ்வரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

❖ 2007ஆம் ஆண்டில் ”சிறுபான்மையினர் நல இயக்குனரகம் உருவாக்கியதே தலைவர் கலைஞரின் அரசுதான் என்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

❖ 2007ஆம் ஆண்டு முதல், முதலமைச்சர் கலைஞர் அவர்களால் பிற்படுத்தப்பட்ட இஸ்லாமிய சமூகத்தினருக்கு 3.5 சதவீதம் தனி இடஒதுக்கீடு வழங்கச் சட்டம் இயற்றி இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (17.02.2024) தலைமைச் செயலகத்தில், சிறுபான்மையினர் நலன் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான எம்.எச்.ஜவாஹிருல்லா, தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத் தலைவர் துறைமுகம் காஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, அரசுத் துறைச் செயலாளர்கள், பல்வேறு இஸ்லாமிய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

❖ அனைத்து மாவட்டங்களிலும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இந்தச் சங்கங்களின் மூலம் ஆதரவற்ற, விதவைகள் மற்றும் வயதான முஸ்லிம்/கிறிஸ்தவப் பெண்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. நாங்கள் இப்போது ஆட்சிக்கு வந்ததும், மேலும் கூடுதலாக 5 மாவட்டங்களில் சங்கங்களை உருவாக்கித் தந்துள்ளோம்.

❖ பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் முஸ்லிம் பெண்களுக்கான விடுதிகள் துவங்கப்பட்டு, தமிழ்நாட்டில் தற்போது 18 சிறுபான்மையினர் நல விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த விடுதிகளில் ரூபாய் 14 இலட்சம் செலவில் ”செம்மொழி நூலகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

❖ ரூபாய் 5.90 இலட்சம் செலவில் உடற்பயிற்சிக் கருவிகள் மற்றும் விளையாட்டுக் கருவிகள் வழங்க ஆணையிடப்பட்டு கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

❖ பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்கள் புனரமைப்பிற்காக மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

❖ கடந்த ஆண்டில் பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்கள் புனரமைப்பிற்காக வழங்கப்படும் மானியத் தொகை ரூபாய் 10 கோடியாக உயர்த்தப்பட்டு, இதன் மூலமாக 134 பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்கள் பயன்பெற்றுள்ளன.

❖ “உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் 2009ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சி காலத்தில்தான் அமைக்கப்பட்டது. அமைக்கப்பட்டு பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நல வாரியத்தில் இதுவரை மொத்தம் 15,848 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

❖ உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் உதவித் தொகைகளை உயர்த்தி வழங்க கடந்த ஆண்டு ஆணையிட்டேன்.

❖ உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு 5.46 கோடி ரூபாய் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

❖ சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் சென்னை, வேலூர், விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 5 மாவட்டங்களில், புதிய பணியிடங்களுடன் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

❖ நமது அரசு உருவானதும் முதன் முறையாக, 1000 இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டில் 2500 தையல் இயந்திரங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு ஆண்டு நிர்வாக மானியம் ரூபாய் 2.50 கோடி வழங்கப்படுகிறது. அதுமட்டுமன்றி, 4 வக்ஃப் சரக அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ வக்ஃப் சொத்துகளைப் பாதுகாக்கும்பொருட்டு, அவற்றை அளவை செய்வதற்காக ரூபாய் 2 கோடி அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. வக்ஃப் சொத்துகளை அளவை செய்யும் பணி நடந்து வருகிறது.

❖ உலமா ஓய்வூதியதாரர் இறந்தபிறகு, அவரின் குடும்பத்தினருக்கு ”குடும்ப ஓய்வூதியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

### பிரிவினைவாதிகள் யார்?

**அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கக் கூடாது என்று சொல்லும் அவர்கள் தான் பிரிவினைவாதிகள். இந்த வரிசையில் சிறுபான்மை யினரின் நலனைப் பாதுகாப்பதிலும், மேம்படுத்துவதிலும் முன்னோடி அரசாக நமது அரசு உள்ளது. குறிப்பாக முஸ்லிம் சமுதாய மக்களுக்கு உரிய வாய்ப்பை வழங்குவதன் மூலமும், அவர்களின் சட்டப்பூர்வ உரிமைகளை உறுதி செய்து, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலமும் சிறுபான்மையினரின் சமூக,பொருளாதார மேம்பாட்டிற்கு இந்த அரசு தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகிறது.**

❖ மாற்றுத்திறனாளிகளுக்கு உலமா ஓய்வூதியம் வழங்குவதற்கான வயது வரம்பை 40 ஆகவும், பணிக்காலத்தினை 10 ஆண்டாகத் தளர்த்தியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

❖ கிராமப்புற சிறுபான்மையின மாணவியர் இடைநிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில, 3 முதல் 6 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாட்டில் இருந்து ‘ஹஜ்’ புனித பயணம் மேற்கொள்ளும் பயனாளிகளுக்கு மானியம் வழங்குவதற்காக ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. 2023ஆம் ஆண்டிற்கான ‘ஹஜ்’ புனிதப் பயணம் மேற்கொண்ட 3987 பயனாளிகளுக்கு ரூபாய் 10 கோடி நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

❖ மாவட்ட காஜிகளுக்கு மாதந்தோறும் ரூபாய் 20 ஆயிரம் மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

❖ இஸ்லாமியர் அடக்கம் செய்யும் இடமான கல்லறைத் தோட்டம் மற்றும் ‘கபர்ஸ்தான்’களுக்கு புதிதாக சுற்றுச் சுவர் மற்றும் பாதை அமைக்க 1 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

❖ சிறுபான்மையினர் அதிகம் வாழும் பகுதிகளில் உள்ள சிறுபான்மையினரின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்தும் வகையிலும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலும் அடிப்படை வசதிகளை வழங்கும் 123 பணிகளுக்கு 658.44 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதி ஆண்டில் 9217 சிறுபான்மைப் பயனாளிகளுக்கு 62 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. இப்படி எண்ணற்ற சாதனைகளை சிறுபான்மையின மக்களுக்குச் செய்து கொடுத்துவரும் அரசுதான் நமது அரசு.

### முக்கிய அறிவிப்புகள்!

சில கோரிக்கைகளை நீங்கள் கடந்த காலங்களில் வைத்து வந்தீர்கள். இந்தக் கூட்டத்திலும் பேசியிருக்கிறீர்கள். அதனையும் நாங்கள் நிறைவேற்றி இருக்கிறோம். அது தொடர்பான சில முக்கிய அறிவிப்புகளை இப்போது வெளியிட விரும்புகிறேன்.

❖ சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கு வாழ்நாள் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்பது உங்களது நீண்ட நாள் கோரிக்கை. மாநில அரசால் கல்வி நிறுவனங்களுக்கு இது வழங்கப்படும்.

❖ மதசார்பு சிறுபான்மையினர் (Religious Minority) அந்தஸ்து சான்றிதழ், காலம் குறிப்பிடப்படாமல், நிரந்தரச் சான்றிதழாக வழங்க அரசாணை 02.02.2024 அன்று வெளியிடப்பட்டுள்ளது என்பதை உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

❖ அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்ற மாணவிகளை ‘புதுமைப் பெண்’ திட்டத்தில் சேர்த்தல் குறித்த ஆணைகள் விரைவில் வெளியிடப்படும்.

❖ கிராமப்புறங்களில் உள்ள அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கும் ‘மாண்புமிகு முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டித் திட்டம்’ விரிவாக்கம் குறித்த ஆணைகள் விரைவில் வெளியிடப்படும்.

❖ சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையின அந்தஸ்து சான்றிதழைப் பெறுவதற்கான விண்ணப்ப செயல்முறையை எளிதாக்கும் வகையில், வலைதளம் (Web portal) உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதற்கிணங்க, தமிழ்நாடு மின்ஆளுமை (TNeGA) மூலம் உருவாக்கப்பட்டு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 07.02.2024 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இஸ்லாமிய மக்களுக்கான அடக்கஸ்தலங்கள் (கபர்ஸ்தான்) இல்லாத மாவட்டத் தலைநகரங்களில் தேவைப்படும் நிலத்தை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் கையகப்படுத்தி மாநகராட்சி / நகராட்சி சார்பில் கபர்ஸ்தான் அமைப்பதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கி அரசாணை 30.1.2024 அன்று வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மேலும், 20 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்நாள் சிறை தண்டனை அனுபவித்து வரும் முஸ்லிம் சிறைவாசிகளை விடுதலை செய்யவேண்டுமென்ற கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, தகுதிகளின் அடிப்படையில் ஆயுள் தண்டனை பெற்று நீண்டநாள் சிறையிலிருந்த 10 சிறைவாசிகள் முன்விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்




கிருஷ்ணகிரியில் உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் கழக பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் பங்கேற்று சிறப்புரையாற்றினார். கிருஷ்ணகிரி டோல்கேட் அருகில் உள்ள தேவராஜ் திடலில், கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு, மாவட்டப் பொறுப்பு அமைச்சரும், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி தலைமை வகித்தார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ., கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஓசூர் மாநகர மேயரும், ஓசூர் நகர செயலாளருமான எஸ். ஏ. சத்யா வரவேற்புரையாற்றினார். கிருஷ்ணகிரி நகரச் செயலாளர் எஸ்.கே நவாப் நன்றியுரை ஆற்றினார்.

### அறிவு சார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதே

# நமது பள்ளிக் கல்வித்துறையின் அடிப்படை நோக்கம்!

## தருமபுரி மண்டல மாநாட்டில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேச்சு!



சென்னை, பிப். 19 -

தருமபுரி அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் பள்ளி கல்வித்துறையின் சார்பில் தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகம் நடத்தும் ”பெற்றோர்களைக் கொண்டாடுவோம்” தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் திருப்பத்தூர் ஆகிய 4 மாவட்டங்களை உள்ளடக்கிய தருமபுரி மண்டல மாநாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் 17.02.2024 அன்று நடைபெற்றது.

இம்மாநாட்டில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளி கல்வி துறைக்கென தனி கவனம் செலுத்தி மற்ற துறைகளை காட்டிலும் அதிக நிதி ஒதுக்கிடு தந்து பல்வேறு திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகின்றார்கள். தமிழ்நாட்டின் பள்ளிக்கல்வித்துறை அமைச்சராக நான் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் இதுநாள் வரை 127 சட்டமன்ற தொகுதியில் உள்ள பள்ளிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு தகுந்த அறிவுரைகளை வழங்கி வருகின்றேன்.

தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் பள்ளி கல்வித்துறை இணைந்து நடத்தும் ”பெற்றோர்களைக் கொண்டாடுவோம்” மூன்றாவது மாபெரும் மண்டல மாநாடு தர்மபுரி மாவட்டத்தில் இன்று நடைபெறுகிறது. இதில் திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டத்தைச் சேர்ந்த 30,000க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் பங்கேற்றுள்ளனர்.

மதுரை, திருச்சி என மற்ற இரண்டு மாநாடுகளிலும் இல்லாத சிறப்பு இந்த தருமபுரி மாநாட்டிற்கு உண்டு. நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலியில் கலந்து கொண்டார்.

பள்ளி கல்வித்துறை அமைச்சர் என்ற வகையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளி மாணவிகளையும் என் பிள்ளைகளாகவே நான் கருதுகிறேன். படிப்பில் பின் தங்கிய அனைவரும் என் செல்ல பிள்ளைகளே அதனால் தான் கல்வியில் பின் தங்கிய மாவட்டமான இந்த தருமபுரி மாவட்டத்தில் இந்த பெற்றோரை கொண்டாடுவோம் என்ற மண்டல மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு மாவட்டத்தை சேர்ந்த அரசு பள்ளிகளுக்கும் அப்பகுதியை சேர்ந்த பெற்றோர்கள், பொதுமக்கள், தன்னார்வலர்கள் என அனைவரும் அப்பள்ளிக்கு வழங்கிய பல்வேறு பெருட்களை சீர்வரிசை பொருட்களாக இங்கு சுமார் 201 பள்ளிகளை சேர்ந்த ஆசிரியர்கள் கொண்டு வந்துள்ளனர். இது மிகுந்த பாராட்ட கூடிய ஒன்றாகும். போராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 18,000 வகுப்பறைகள் கட்ட இலக்கு நிர்ண யிக்கப்பட்டு தற்பொழுது வரை 3,000 வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், 3,000 வகுப்பறைகள் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பெறுப்பேற்ற பிறகு இதுநாள் வரை 3,601 வகுப்பறைகள், 21 ஆய்வகங்கள், 184 கழிவறை தொகுப்புகள், 700 மீட்டர் நீள சுற்றுச்சுவர், 5 நூலகங்கள் என மொத்தம் 2,080 கோடி மதிப்பிலான கட்டிடங்களை திறந்து வைத்துள்ளார்கள். பள்ளி கல்வித்துறையின் சார்பில் 57 திட்டங்கள் உருவாக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட காலை உணவுத்திட்டம் பார் போற்றும் திட்டமாக மற்ற மாநிலங்களுக்கு முன்னோடித்திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. கொரோனா காலத்தில் ஏற்பட்ட கற்றல் இடைவெளிகளை போக்கும் வகையில் இல்லம் தேடி கல்வி என்னும் சிறப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு மாணவ, மாணவியர்களின் கல்வித் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தால் இல்லம் தேடி கல்வித் திட்டம் சிறப்பானதொரு திட்டம் என பாராட்டப்பட்டுள்ளது.

அறிவு சார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதே நமது பள்ளி கல்வித்துறையின் அடிப்படை நோக்கம் ஆகும். இதை உணர்ந்து ஆசிரியர்களும், பெற்றோர்களும் தங்களது பிள்ளைகளுக்கு அவர்கள் விரும்பும் வகையில் அவர்களது திறமைகளை கண்டறிந்து வெளிக்கொண்டு வர வேண்டும். ஒவ்வொரு மாணவர்களையும் அறிவு சார்ந்த மாணவர்களாக உருவாக்கிட தங்களால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஆசிரியரும் தங்களது வகுப்பறையில் உள்ள மாணவர்களை வாசிப்பு பழக்கத்திற்கு உட்படுத்தி அதில் ஏற்படும் தவறுகளை சரி செய்யும் பட்சத்தில் அவ்வகுப்பறையில் உள்ள அனைவரும் மொழி அறிவில் தேர்ச்சி பெற முடியும்.

இந்தியாவில் இருந்து தைய்வான் அரசின் கல்வி உதவிதொகையுடன் அந்நாட்டின் பல்கலைக்கழகத்தில் கல்வி பயில தேர்வு செய்யப்பட்டுள்ள 3 மாணவர்களில் நமது தமிழ்நாட்டை சேர்ந்த 2 மாணவியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்பது பெருமைக்கூறிய ஒன்றாகும். கல்வி வறுமையின் அடையாளம் அல்ல! பெருமையின் அடையாளம்! இங்கு வந்திருக்கக்கூடிய ஆசிரியர்கள், பெற்றோர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் அரசின் திட்டங்களுக்கு ஆதரவளித்து அறிவு சார்ந்த சமுதாயத்தினை உருவாக்கிட உறுதுணையாக இருக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசினார்.

முன்னதாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் முடிவுற்ற பள்ளி கட்டிடங்கள் மற்றும் நூலகத்தினை சென்னையில் இருந்து திறந்து வைத்ததற்காக தருமபுரி அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற ”பெற்றோர்களைக் கொண்டாடுவோம்” தருமபுரி மண்டல மாநாட்டில் இருந்து காணொலி காட்சியின் வாயிலாக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து பேசினார்.

இதனைத் தொடர்ந்து, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பள்ளிகளுக்கு தங்களது நிலம், அதிக அளவிலான நிதி , பொருட்கள் மற்றும் கட்டிடங்கள் உள்ளிட்டவற்றை தானமாக வழங்கிய தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் திருப்பத்தூர் ஆகிய 4 மாவட்டங்களை சேர்ந்த 100 நன்கொடையாளர்களுக்கு கேடையங்களை வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கி.சாந்தி, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், பென்னாகரம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி, தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஷ்வரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், பள்ளி கல்வித்துறை இயக்குநர் க.அறிவொளி, தொடக்கக் கல்வித்துறை இயக்குநர் ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர்.சு.நாகராஜமுருகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன், மாவட்ட வருவாய் அலுவலர்செ. பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், வருவாய் கோட்டாட்சியர் திருமதி. இரா. காயத்ரி, சிறப்பு பேச்சாளர் கல்லூரி பேராசிரியர்.பர்வீன் சுல்தானா, தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவர்கள் வி.முத்துகுமார், என். கே.ஆர்.சூரியகுமார், ஆசிரியர் மனசு திட்ட ஒருங்கிணைப்பாளர் சிகரம் சதீஷ் குமார், நல்லம்பள்ளி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஷ்வரி பெரியசாமி, நகர்மன்றத் தலைவர் திருமதி. மா. இலட்சுமி, தடங்கம் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.கவிதா முருகன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் திருமதி.ஜோதி சந்திர (தருமபுரி), திருமதி.மகேஷ்வரி (கிருஷ்ணகிரி), மு.கபீர் (சேலம்), முனிசுப்புராயன் (திருப்பத்தூர்), மாவட்ட கல்வி அலுவலர்கள், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம், நாகை நகரத்தில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த நகர இணைச் செயலாளர் நூர்ஜஹான், இளைஞர் மற்றும் இளம்பெண் பாசறை மாவட்ட தலைவர் முஹம்மதுஇஸ்மாயில் ஆகியோர் தலைமையில் 30 பேர் அக்கட்சியில் இருந்து விலகி நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராசன், மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன், திட்டச்சேரி பேரூர் செயலாளர் முகம்மதுசுல்தான், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் இரா.தங்கதுரை, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் குலோத்துங்கன், நகரக் கழக துணைச் செயலாளர்கள் வெற்றிலைகடை சிவா, பி.திலகர் மற்றும் பலர் உள்ளனர்.





தி.மு.கழகத்தின் கொள்கைகளை உயர்த்திப் பிடித்து கழகத்தை காத்த கழக மூத்த முன்னோடிகள் 1001 பேருக்கு இராமநாதபுரம் மாவட்டக் கழகம் சார்பில் கீழக்கரையில் நடைபெற்ற நிகழ்வில், தலா ரூ.10,000 பொற்கிழி மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்பு செய்தார்.

### மாணவ, மாணவிகள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்று

# பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## கீரமங்கலத்தில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!



புதுக்கோட்டை, பிப். 19 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக 17.02.2024 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், புதிதாகக் கட்டப்பட்டுள்ள பள்ளி வகுப்பறை கட்டிடங்களை திறந்து வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் , மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் கலந்துகொண்டார்.

பின்னர் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகள் கல்வியில் சிறப்பாக விளங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள், குடிநீர் வசதி, கழிவறை வசதி, விளையாட்டு மைதானங்கள், வகுப்பறை கட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேம்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 23 பள்ளிகளில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பள்ளி வகுப்பறை கட்டிடங்களை திறந்து வைத்துள்ளார்கள்.

அதன்படி, புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், பரம்பூர் ஊராட்சி, கடம்பராயன்பட்டியில் ரூ.28 இலட்சம் மதிப்பிலும் மற்றும் ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியம், கலபத்தில் ரூ.28.50 இலட்சம் மதிப்பிலும், நட்டானிபுரசக்குடி ஊராட்சி, ஆர். புதுப்பட்டிணத்தில் ரூ.28.50 இலட்சம் மதிப்பிலும், திருப்பெருந்துரையில் ரூ.28.50 இலட்சம் மதிப்பிலும், வேல்வரையில் ரூ.28.50 இலட்சம் மதிப்பிலும் மற்றும் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கந்தர்வக்கோட்டையில் ரூ.28.30 இலட்சம் மதிப்பிலும், கல்லாக்கோட்டையில் ரூ.28.30 இலட்சம் மதிப்பிலும், கோமாபுரத்தில் ரூ.28.30 இலட்சம் மதிப்பிலும், பழைய கந்தர்வக் கோட்டை ஊராட்சி, சோழகம்பட்டியில்

ரூ.28.30 இலட்சம் மதிப்பிலும், புதுப்பட்டியில் ரூ.28.30 இலட்சம் மதிப்பிலும் மற்றும் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், குழந்திரான்பட்டு ஊராட்சி, கட்டுவான்பிரையில் ரூ.28.30 இலட்சம் மதிப்பிலும், பல்லவராயன்பதையில் ரூ.28.30 இலட்சம் மதிப்பிலும் மற்றும் குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம், ஒடுக்கூரில் ரூ.28 இலட்சம் மதிப்பிலும் மற்றும் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், முள்ளூரில் ரூ.28 இலட்சம் மதிப்பிலும், தொண்டைமான்ஊரணி ஊராட்சி, ராஜாபகதூரில் ரூ.28 இலட்சம் மதிப்பிலும் மற்றும் திருமயம் ஊராட்சி ஒன்றியம், கே.பள்ளிவாசலில் ரூ.28 இலட்சம் மதிப்பிலும், பேரையூர் ஊராட்சி, அரசன்தம்பட்டியில் ரூ.28 இலட்சம் மதிப்பிலும் மற்றும் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கல்லாங்குடியில் ரூ.28 இலட்சம் மதிப்பிலும், வெண்ணாவல்குடி ஊராட்சி, கருவன் குடியிருப்பில் ரூ.28 இலட்சம் மதிப்பிலும் மற்றும் விராலிமலை ஊராட்சி ஒன்றியம், விராலிமலையில் ரூ.28 இலட்சம் மதிப்பிலும் மற்றும் கீரமங்கலம் பேரூராட்சியில் ரூ.28 இலட்சம் மதிப்பிலும் என ஆகமொத்தம் ரூ.6.49 கோடி மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பள்ளி வகுப்பறை கட்டிடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். இதேபோன்று, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக 17.02.2024 அன்று புதுக்கோட்டை நகராட்சி, காட்டுபுதுகுளத்தில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை சார்பில், புதுக்கோட்டை3 வரிவிதிப்பு வட்டம், மாநில வரி அலுவலக விரிவாக்க கட்டிடத்தினை திறந்து வைத்தார்கள். எனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் கல்வி சார்ந்த திட்டங்கள் மற்றும் பல்வேறு திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்தி சிறந்து விளங்க வேண்டும் என அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம்.மஞ்சுளா, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, கீரமங்கலம் பேரூராட்சித் தலைவர் சிவக்குமார், கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலர் இளவரசி, ஒன்றியக்குழு உறுப்பினர் கே.எஸ்.ரவி, மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில், ஆலங்குடி வட்டாட்சியர் பெரியநாயகி, வட்டார வளர்ச்சி அலுவலர் கோகுலகிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் செ.இராமலிங்கம் எம்.பி, கும்பகோணம் மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாவட்டக் கழக நிர்வாகிகள் க.நசீர்முகமது, கோவி.அய்யாராசு, எஸ்.துரைமுருகன், சாஸ்தா நடராஜன், மாநில கழக நிர்வாகிகள் ஆடுதுறை மு.உத்திராபதி, டி.ஆர்.கே.விஜயன் மற்றும் ஒன்றிய,, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.02.2024) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், டைடல் நியோ லிமிடெட் மூலமாக விழுப்புரம் மாவட்டம், திருச்சிற்றம்பலத்தில் சுமார் 500 தகவல் தொழில் வல்லுநர்கள் பணிபுரியும் வகையில் 31 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் 63,000 சதுரஅடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் டாக்டர். வி. ஜெய சந்திர பானு ரெட்டி, ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.02.2024) தலைமைச் செயலகத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில், 15 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 13 குடியிருப்புகள், 2 மாவட்ட அலுவலர் அலுவலகங்கள் மற்றும் தீயணைப்பு நிலையங்கள் மற்றும் 4 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முனைவர் அ.கா. விசுவநாதன், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ் குமார், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இணை இயக்குநர் திருமதி மீனாட்சி விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில்

# ரூ.502.51 கோடியில் புதிய கட்டிடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, பிப்.19-

**தமிழ்நாட்டில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 502 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். 732 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய பணிகளுக்கும் முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.**

அதன் விபரம் வருமாறு:-

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் தகவல் தொழில்நுட்பத் துறையின் திறனை உணர்ந்து, விரைவான தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உகந்த வணிகச் சூழலை தமிழ்நாடு அரசு உருவாக்கி வருகிறது. இதன்மூலமாக பன்னாட்டுத் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்கள் முதலீடு செய்வதற்குத் தமிழ்நாடு விருப்பத் தேர்வாக உருவாகியுள்ளது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் தமிழ்நாட்டில் தழைத்து வளரத் தமிழ்நாடு அரசின் கொள்கையின் அடிப்படையில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம், சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஓசூர் ஆகிய நகரங்களில் 8 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களை (எல்கோசெஸ்கள்) உருவாக்கி உள்ளது.

### திருச்சியில் ரூ.59.57 கோடியில் தகவல் தொழில்நுட்பக் கட்டடம்!

திருச்சிராப்பள்ளி மாவட்டம், நவல்பட்டில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) 147.61 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.80.55 கோடி முதலீட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை (எல்கோசெஸ்) உருவாக்கியுள்ளது. இதில், 123.23 ஏக்கர் நிலப் பரப்பளவு, சிறப்புப் பொருளாதார மண்டலமாக உள்ளது. இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு, நிருவாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடமும் கட்டப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, திருச்சிராப்பள்ளி மாவட்டம், நவல்பட்டில் 1,16,064 சதுர அடி பரப்பளவில் 59.57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரை மற்றும் 4 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை (IT Tower) முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். இந்தத் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தின் மூலம் சுமார் 2800 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும்.

இந்த நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமார், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். அனீஷ் சேகர், ஆகியோர் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.2.2024) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், நவல்பட்டில் 59.57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை (IT Tower) காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமார், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.அனீஷ் சேகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவர் மா. பிரதீப் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் மாவட்டத்தில் ரூ. 31 கோடியில் டைடல் பூங்கா!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.02.2024) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், டைடல் நியோ லிமிடெட் மூலமாக விழுப்புரம் மாவட்டம், திருச்சிற்றம்பலத்தில் சுமார் 500 தகவல் தொழில் வல்லுநர்கள் பணிபுரியும் வகையில் 31 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் 63,000 சதுரஅடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். முதலமைச்சர் அவர்களால் 24.06.2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, இத்திட்டப்பணிகள் குறுகிய காலத்திலேயே நிறைவடைந்து திறந்து வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தினால் விழுப்புரம் மாவட்டத்தில் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதுடன் மாவட்டத்தின் சமூக பொருளாதாரமும் மேம்படும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது தொலைநோக்குப் பார்வையில் சென்னை ராஜீவ் காந்தி சாலையில் அமைக்கப்பட்ட டைடல் பூங்கா, தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பப் புரட்சி ஏற்பட அடித்தளமாக அமைந்தது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி மாநிலம் முழுவதும் பரவலாக அமைவதை உறுதி செய்திட, முதற்கட்டமாக விழுப்புரம், வேலூர், திருப்பூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் டைடல் பூங்காக்கள் உருவாக்கப்படும் என 2021-2022ஆம் ஆண்டிற்கான திருத்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், திருச்சிற்றம்பலம் கிராமத்தில், 31 கோடி ரூபாய் செலவில், 63,000 சதுரஅடி பரப்பளவில், தரை மற்றும் நான்கு தளங்களுடன், குளிர்சாதன வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள், தடையற்ற உயரழுத்த மும்முனை மின் இணைப்பு, மின்தூக்கிகள், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள், தீ பாதுகாப்பு, கட்டட மேலாண்மை, மின் விளக்குகளுடன் கூடிய உட்புற சாலை, 24x7 பாதுகாப்பு, உணவகம் மற்றும் உடற்பயிற்சிக்கூடம் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவை முதலமைச்சர் அவர்கள் நேற்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியின்போது, முதலமைச்சர் அவர்கள், இக்கட்டடத்தின் முதலாவது இடஒதுக்கீடு ஆணையை SUV Startup Space நிறுவனத்தின் எஸ்.யுவராஜ் அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் டாக்டர். வி. ஜெய சந்திர பானு ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நாடாளுமன்ற உறுப்பினர் டி.ரவிகுமார், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஆர்.லட்சுமணன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### ரூ. 15 கோடியில் தீயணைப்பு நிலைய கட்டிடங்கள்!

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.02.2024) தலைமைச் செயலகத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில், 15 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 13 குடியிருப்புகள், 2 மாவட்ட அலுவலர் அலுவலகங்கள் மற்றும் தீயணைப்பு நிலையங்கள் மற்றும் 4 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது “காக்கும் பணி, எங்கள் பணி” என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு மக்களுக்கு சேவையாற்றும் துறையாகும். மேலும், பேரிடர் காலங்களில் மக்களை மீட்டெடுக்கும் பணிகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முக்கிய பணிகளை ஆற்றி வரும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணிகள் சிறக்க கடந்த இரண்டரை ஆண்டுகளில் முதலமைச்சர் அவர்களால் ரூ.28.43 கோடி செலவில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 168 குடியிருப்புகள், ரூ.23.10 கோடி செலவில் 16 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள், ரூ.2.45 கோடி செலவில் 2 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக் கட்டடங்கள், என மொத்தம் ரூ.53.98 கோடி செலவிலான கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம், திருவண்ணாமலை மாவட்டம் - சேத்துப்பட்டில் 2 கோடியே 51 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 13 குடியிருப்புகள்;

கடலூரில் 4 கோடியே 43 இலடசம் ரூபாய் செலவிலும், தூத்துக்குடியில் 2 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள இரண்டு மாவட்ட அலுவலர் அலுவலகங்கள் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள்;

கரூர் மாவட்டம் - அரவக்குறிச்சியில் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவிலும், இராணிப்பேட்டை மாவட்டம் - இராணிப்பேட்டையில் 1 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவிலும், விருதுநகர் மாவட்டம் - இராஜபாளையத்தில் 2 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவிலும், தென்காசி மாவட்டம் - சங்கரன்கோவிலில் 94 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள நான்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள்;

என மொத்தம் 15 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவிலான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முனைவர் அ.கா. விசுவநாதன், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ் குமார், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இணை இயக்குநர் திருமதி மீனாட்சி விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும், கடலூர் மாவட்டத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அ. அருண் தம்புராஜ், மேயர் திருமதி சுந்தரி ராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!... முதல் பக்கத் தொடர்ச்சி

மேலும் 11 ஆயுள் தண்டனை சிறைவாசிகளின் முன் விடுதலைக் கோப்புகள் ஆளுநரின் ஒப்புதலுக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

வழிபாட்டுத் தலங்களுக்கு முறையான அனுமதி பெறுவதிலும், வழிபாட்டுத் தலங்களில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்வதிலும் இருக்கக்கூடிய இடர்ப்பாடுகளைக் களைந்து, ஒரு நிலையான இயக்க நடைமுறை (SOP) வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவும் விரைவில் வெளியிடப்படும்.

பள்ளிக் கல்வித் துறையில், அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அனைத்து வகையான ஆசிரியர்கள் நேரடிநியமனத்திற்கான உச்ச வயது வரம்பினை பொதுப்பிரிவினருக்கு 53 எனவும், இதரப் பிரிவினருக்கு 58 எனவும் நிர்ணயித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்த உச்ச வயது வரம்பு அரசு நிதியுதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த நான் ஆணையிட்டுள்ளேன்.

### வக்ஃபு வாரியத்திற்கு - புதிய அலுவலகக் கட்டிடம்!

சிறுபான்மையினரின் கல்லூரி ஆசிரியர் பணியிடங்களில் யு.ஜி.சி. மற்றும் அரசு விதிகளுக்குட்பட்டு தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு, பல்கலைக்கழகம் மற்றும் அரசால் நியமன அங்கீகாரம் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் வழங்கப்படும்.

வக்ஃபு வாரியத்திற்குப் போதுமான இட வசதிகளுடன் கூடிய புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும்.

வக்ஃபு வாரியத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், 27 இளநிலை உதவியாளர்கள் பணியிடங்களுக்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் அப்பணியிடங்கள் நிரப்பப்படும்.

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, மற்றும் சீர்மரபினர் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் இஸ்லாத்தைத் தழுவினால் அவர்களுக்கு ‘பிற்படுத்தப்பட்ட முஸ்லிம் இடஒதுக்கீடு வழங்க வேண்டும்’ என்ற நீண்ட நாள் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலனை செய்து, சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து ஆவன செய்யப்படும் என்று ஏற்கனவே சட்டப்பேரவையில் 15.2.2024 அன்று அறிவித்துள்ளேன். அதுவும் விரைவில் கிடைக்கும்.

இவையுடன் சேர்த்து மேலும் சில அறிவிப்புகளை இங்கு வெளியிட விரும்புகிறேன்!

- தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், கூட்டுறவு வங்கிகள் மூலம் சிறுபான்மையின மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்விக் கடன்கள், இனிமேல் ரூபாய் 5 இலட்சம் வரை வழங்கப்படும்.
- வக்ஃப் நிலங்களை கல்வி, மருத்துவம் மற்றும் சமூக மேம்பாட்டிற்காக, 30 ஆண்டு நீண்ட கால குத்தகைக்கு வழங்க ஆய்வு செய்து, அரசு விரைவில் அனுமதி வழங்கும்.

### மதுரையிலும் ஒரு தீர்ப்பாயம்!

- வக்ஃப் சொத்துக்கள் மற்றும் நிர்வாகம் தொடர்பான வழக்குகளை ஆய்வு செய்ய சென்னையில் இருப்பதைப் போல மதுரையிலும் ஒரு தீர்ப்பாயம் அமைக்க உயர்நீதிமன்றத்தில் ஒப்புதல் பெறப்படும்.
- சிறுபான்மையின மக்களுக்கு வழங்கிவந்த கல்வி உதவித் தொகையினை (PreMatric Scholarship) ஒன்றிய அரசு 2022-2023ஆம் ஆண்டு முதல் 1 முதல் 8ஆம் வகுப்பு பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு நிறுத்திவிட்டது. இதனை மீண்டும் வழங்க வேண்டும் என்று பிரதமருக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன்.
- இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டதன் காரணமாக, தமிழ்நாட்டில் ஏழை சிறுபான்மையின மக்கள் கல்வி உதவித் தொகையினைப் பெற இயலாமல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, ஒன்றிய அரசால் நிறுத்தப்பட்ட கல்வி உதவித்தொகையினை, 1 முதல் 8ஆம் வகுப்பு வரை அரசு, மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் முஸ்லிம் மாணவியர்களுக்கு, தமிழ்நாடு அரசு நிதி உதவியுடன் வக்ஃப் வாரியம் மூலம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் 1 இலட்சத்து 26 ஆயிரத்து 256 முஸ்லிம் மாணவியர்கள் பயன் பெறுவார்கள்.
- உருது, அராபிக் மற்றும் இதர ஓரியண்டல் மொழித் தேர்வுகளுக்கான கட்டணத்தை சென்னைப் பல்கலைக்கழகம் ரூ.540/லிருந்து ரூ.3000/ஆக உயர்த்தியது அரசின் கவனத்திற்கு வரப்பெற்றுள்ளது. இந்தக் கல்வியாண்டில் முந்தைய கட்டணத் தொகையான ரூ.540/ மட்டுமே மாணவர்களிடமிருந்து பெறப்பட வேண்டும் என்று சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அறிவுரைகள் வழங்கப்படும்.
- மேலும், ஓரியண்டல் மொழித் தேர்வுக்கு விண்ணப்பம் செய்வதற்கான கடைசி நாள், ஏற்கெனவே முடிந்துவிட்ட நிலையில், விண்ணப்பம் செய்யாத மாணவர்கள், விண்ணப்பிப்பதற்கு ஏதுவாக, இந்த மாதம் 29.2.2024 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.
- சென்னைப் பல்கலைக்கழகத்தில் தொலைதூரக் கல்வி மூலம் அராபிக் பாடத்திட்டம், குறைவான மாணவர் சேர்க்கையால் இந்த ஆண்டு கைவிடப்பட்டிருந்தது. இருப்பினும், உங்களுடைய கோரிக்கையைக் கருத்தில் கொண்டு, அடுத்த கல்வியாண்டு முதல், இப்பாடத்திட்டம் மீண்டும் தொலைதூரக் கல்வி மூலம் கொண்டு வரப்படும்.
- முஸ்லிம் சட்டப்படி திருமணம் செய்த இரண்டாம் மனைவி மற்றும் அவரது வாரிசுகளுக்கு கணவர் இறப்புக்குப் பின்னால் வாரிசு சான்றிதழ் வழங்க ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த அனைத்து உத்தரவுகளும் உடனடியாகச் செயல்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

### கோரிக்கைகள் அனைத்தும் பரிசீலித்து படிப்படியாக நிறைவேற்றப்படும்!

சிறுபான்மை மக்களாகிய நீங்கள் அச்சமற்று வாழும் அமைதிச் சூழலை தமிழ்நாடு அரசு உருவாக்கிக் கொடுத்துள்ளது. அமைதியான சூழலை உருவாக்கித் தருவதே நல்லாட்சியின் இலக்கணம் ஆகும். அத்தகைய இலக்கணப்படி நடைபெறும் இந்த அரசுடன் உங்கள் கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும் அதனைப் பரிசீலித்து, படிப்படியாக நிறைவேற்றித் தர நாங்கள் தயாராக இருக்கிறோம்.

தமிழ்நாட்டின் மிகப்பெரிய அரசியல் மாற்றத்தை 1967ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் உருவாக்கியது திராவிட முன்னேற்றக் கழகம். அந்த மாற்றத்தை உருவாக்க பேரறிஞர் அண்ணா தன்னுடன் யாரை இணைத்துக் கொண்டார் என்றால் கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களைத்தான்.

### மொழியால் தமிழர்கள் என்ற உணர்வோடு ஒற்றுமையாக வாழ்வோம்!

சிறுபான்மையினர் அமைப்புகள் சேர்ந்து தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பாராட்டு விழாவை நடத்தியபோது, ‘என்னை உங்களில் இருந்து பிரித்துப் பார்த்து நன்றி சொல்லாதீர்கள், நான் என் கடமையைத்தான் செய்தேன்’ என்றார் தலைவர் கலைஞர் அவர்கள். அத்தகைய எண்ணம் கொண்டுதான் நானும் செயல்பட்டு வருகிறேன்.

மொழியால் தமிழர்கள் என்ற ஒற்றுமை உணர்வோடு ஒற்றுமையாக வாழ்ந்து, மாநிலத்தையும் வளர்த்து, இந்திய நாட்டையும் செழிக்க வைப்போம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.02.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 592 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 36 திருக்கோயில்களில் கட்டப்படவுள்ள புதிய இராஜகோபுரம், திருமண மண்டபங்கள், பக்தர்கள் தங்கும் விடுதி, வணிக வளாகங்கள், பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம், பல்நோக்கு மண்டபம், வசந்த மண்டபம், முடிகாணிக்கை மண்டபம், கலையரங்கம், அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு, பக்தர்களுக்கு ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிகள், வள்ளலார் சர்வதேச மையம் அமைத்தல், ஆன்மிக கலாச்சார மையம், உதவி ஆணையர் அலுவலகம், பள்ளி மற்றும் கல்லூரி வகுப்பறை கட்டடங்கள், ஒதுவார் பயிற்சிப் பள்ளி மற்றும் பெண்கள் தங்கும் விடுதி போன்ற 43 புதிய திட்டப் பணிகளுக்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் . க.வீ.முரளீதரன், தலைமைப் பொறியாளர் . பி.பெரியசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.02.2024) தலைமைச் செயலகத்தில், வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுவின் உறுப்பினர்கள் திருமதி சாரதா நம்பி ஆரூரான், சிவ மெய்யப்பன், முனைவர் உலகநாயகி, என்.இளங்கோ மற்றும் வடலூர் வள்ளலார் தலைமைச் சங்க நிர்வாகிகள் சந்தித்து, கடலூர் மாவட்டம், வடலூர், திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் 99.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் அமைச்சர் .பி.கே.சேகர்பாபு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன் ஆகியோர் உள்ளனர்.

## சாதாரண மக்களையும் கொச்சைப்படுத்தும் பா.ஜ.க. ஆட்சியை விரட்டியடித்து

# இந்தியாவைக் காப்பாற்ற ‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெறச் செய்வீர்!

## ஒட்டப்பிடாரம் தொகுதியில் ‘இந்தியா வெல்வது நிச்சயம்’ என்ற பொதுக்கூட்டத்தில் - கனிமொழி கருணாநிதி எம்.பி. வேண்டுகோள்!

**ஒட்டப்பிடாரம், பிப்.19 -**

**“சாதாரண மக்களையும் கொச்சைப்படுத்தும் பா.ஜ.க. ஆட்சியை விரட்டியடித்து இந்தியாவைக் காப்பாற்ற ‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெறச் செய்வீர்” என்று கழகத் துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற மக்களவைக் கழகக் குழுத் துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வேண்டுகோள் விடுத்தார்.**



பிப்ரவரி 15–ஆம் தேதி வியாழக்கிழமை, தூத்துக்குடி தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, புதியம்புத்தூரில் “I.N.D.I.A வெல்வது நிச்சயம்” என்ற தலைப்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி பேசியதாவது:–

“இந்த கூட்டத்தின் பெயரே, ‘இந்தியா வெல்வது நிச்சயம்’ என்பது. நமது மாவட்டச் செயலாளர் அவர்கள் தன்னம்பிக்கையின் உச்சமாக வைத்திருக்கக் கூடிய பெயர் தான் இந்த பெயர்.

பல பேர் மனதில் ஒரு கேள்வியை வைத்திருக்கிறார்கள். ஊடகங்கள் அதை வெளிப்படுத்துகின்றன. பிரதமர் உட்பட பலர் பேசும்போது நாங்கள் 400 இடங்களில் வெற்றி பெறுவோம், 370 இடங்களில் வெற்றி பெறுவோம் என்று பி.ஜே.பி. பரப்புரை செய்து வருகிறது. இந்த நேரத்தில்தான் நாம் அவர்களுக்கு எதிராக வைக்கக் கூடிய வாதம் இந்தியா வெல்வது நிச்சயம்.

**பா.ஜ.க. வெற்றி என்பது இந்த நாட்டின் தோல்வி!**

இதில் இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. ஒன்று பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்திய நாடே தோற்றுப்போகும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களுடைய வெற்றி என்பது இந்த நாட்டின் தோல்வி. இன்னொன்று நமது கூட்டணி யாக இருக்கக் கூடிய ‘இந்தியா’ கூட்டணி வெல்ல வேண்டும் என்பது.

வட மாநிலங்களில் அவர்கள் வெற்றி பெற்றுவிடுவார்கள் என்ற கோஷம் வலுத்துக் கொண்டே இருக்கிறதே? மாற்று அரசு, மாற்று அரசியல் எப்படி உருவாக்க முடியும் என்று சிலர் கேட்கலாம்.

எத்தனை பேர் எதிர்பார்த்தோம்? கர்நாடகாவில் பா.ஜ.க. தூக்கி எறியப்படும் என்ற நிலை வரும் என்பதை எத்தனை பேர் எதிர்பார்த்தோம்? தெலுங்கானாவில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. பஞ்சாப்பில் ஆம் ஆத்மி ஆட்சி அமைத்தது. இமாசலப்பிரதேசத்தில் பா.ஜ.க. ஆட்சியை இழந்தது. கனவில் கூட அவர்களால் மேற்கு வங்காளத்தில் மம்தாவை அசைத்துக் கூட பார்க்க முடியவில்லை. கேரளாவில் அவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்று தெரியாத ஒரு நிலையில் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் அவர்களைப் பற்றி நாம் பேசவே வேண்டாம்.

**இந்தியாவில் நிச்சயம் ஆட்சி மாற்றம் ஏற்படும்!**

இப்படிப்பட்ட நிலையிலே நாம் தன்னம்பிக்கையோடு இருக்க வேண்டும். நிச்சயமாக இந்த நாடு வெற்றி பெறும். ஆட்சி மாற்றப்படும் என்ற உறுதியோடு இந்த தேர்தலிலே நாம் பணியாற்ற வேண்டும். யாரையும் அசைக்க முடியாது என்ற நிலை தொட ராது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்றைக்கு உச்சநீதிமன்றம் பா.ஜ.க. ஆட்சியிலே கொண்டுவரப்பட்ட தேர்தல் பத்திரம் தொடர்பான சட்டம் பற்றி முக்கியமான தீர்ப்பை அளித்துள்ளது. எலக்‌ஷன் பாண்டு என்கிற தேர்தல் பத்திரம் மூலம் யார் வேண்டுமானாலும் ஒரு கட்சிக்கு எவ்வளவு வேண்டுமானாலும் நிதி கொடுக்கலாம், எந்த கணக்கும் காட்ட வேண்டியதில்லை என்பதுதான் அந்த சட்டம்.

பா.ஜ.க. இந்த சட்டத்தைக் கொண்டுவந்த பிறகு 2018 -இல் அவர்களுக்கு வந்த எலக்‌ஷன் பாண்டு 210 கோடி. 2019–இல் 1450 கோடி. 2020–இல் 2505 கோடி, 2022–இல் 1033 கோடி, 2023–இல் 1294 கோடி. மொத்தம் 6500 கோடி ரூபாய். இந்த பணம் எங்கிருந்து யார் பா.ஜ.க.வுக்கு கொடுத்தார்கள் என்பது தெரியாது. ஆனால், இந்த நாட்டிலேயே மிக பணக்கார கட்சி என்று ஒன்று இருக்கிறது என்றால் பா.ஜ.க.தான். அதானி, அம்பானி அடுத்து பா.ஜ.க. தான் என்று இருந்த நிலையில் அவர்கள் கொண்டு வந்த சட்டம் செல்லாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

**தி.மு.க. நினைத்தால் எதையும் மாற்றிக்காட்டும்!**

அதனால் மாற்ற முடியாதது என்று எதுவுமே இல்லை. மக்கள் நினைத்தால் தமிழர்கள் நினைத்தால் தி.மு.க. நினைத்தால் எதையும் மாற்றிக் காட்டும் என்ற உறுதியோடு இந்தத் தேர்தலில் நாம் பணியாற்ற வேண்டும்.

இங்கே அதிக அளவில் பெண்கள் வந்திருக்கிறீர்கள். இங்கே பேசியவர்கள் எல்லாம் பெண்கள் முன்னேற்றத்தில் தி.மு.க.வின் பங்கு பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்கள். சொத்திலே பெண்களுக்கு சமபங்கு கொண்டுவந்தார் தலைவர் கலைஞர். பெண்களை கல்யாணம் பண்ணிக் கொடுத்தால் போதும், அவர்கள் ஏன் படிக்க வேண்டும்? சமையல் கற்றுக்கொண்டால் போதும் என்றெல்லாம் சொன்ன காலம் இருந்தது. ஆனால் தலைவர் கலைஞர், ‘பெண்ணை படிக்க வை... பள்ளிப் படிப்பை முடிக்க வை. அந்த பெண்ணின் திருமணத்துக்கு நான் நிதியுதவி செய்கிறேன்’ என்று அறிவித்து, ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள பெண் 10–ஆவது வரை படிக்கக் கூடிய நிலையை உருவாக்கிக் காட்டியவர் கலைஞர். 10–ஆவது அந்த பெண் படித்துவிட்டால் நிச்சயமாக அவள் போராடி, அதற்கு மேலும் படிப்பாள்.

**கல்லூரி மாணவிகளுக்கான புதுமைப்பெண் திட்டம்!**

முதல் தலைமுறையில் இருக்கும் பெண்கள் படிக்கும் போது அந்த பெண்களுக்கு உதவித்தொகை தந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. நம் வீட்டு குழந்தைகள் இன்று கல்லூரிகளில் போய் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்போது நம்முடைய முதலமைச்சர் தளபதி ஆட்சி வருகிறது.

திருமண உதவித் தொகை என்று வழங்கப்பட்ட அந்தத் திட்டத்தை மாற்றி இன்று இருக்கக்கூடிய பெண்கள் புதுமைப் பெண்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆயிரம் கனவுகள் இருக்கின்றன. அவர்கள் கல்லூரியில் படிக்கும்போது உனக்கு மாதம் ஆயிரம் ரூபாய் ஒரு சகோதரனாக ஒரு தந்தையாக நான் செலவுக்குத் தருகிறேன் என்று புதுமைப் பெண் திட்டத்தை உருவாக்கித் தந்தவர் நமது முதலமைச்சர் தளபதி அவர்கள்.

வீட்டில் பெண்கள் சும்மா இருக்கிறார்கள் என்ற பேச்சு வெகு காலமாகவே இருந்து வருகிறது. எந்த பெண் வீட்டில் சும்மா இருக்கிறார்? காலையில் இருந்து வீடு பெருக்கி, துடைத்து, சமைத்து, பிள்ளைகளை பள்ளிகளுக்கு அனுப்பி, வீட்டில் இருக்கும் அத்தனை வேலைகளையும் பார்த்து இரவு சமைத்து, வீட்டில் எல்லாரும் தூங்கிய பிறகும், பாத்திரங்களை விளக்கி சமையலறையை சுத்தப்படுத்தி வைத்து விட்டுதான் வந்து படுக்க வேண்டும். இந்த வேலைக்கு பெண்களுக்கு லீவும் கிடையாது. மற்றவர்களுக்கெல்லாம் லீவு என்றால் பெண்களுக்கு எக்ஸ்ட்ரா வேலைதான். அதேபோல பண்டிகை தினங்களிலும் பெண்களுக்கு கூடுதல் வேலைதான்.

**கலைஞர் மகளிர் உரிமைத் தொகை!**

இப்படிப்பட்ட பெண்களின் உழைப்பை மதிக்கக்கூடிய அங்கீகாரம் தரக்கூடிய வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட ஒரு கோடியே 15 லட்சம் பெண்களுக்கு வழங்கி வரக்கூடிய ஆட்சி நமது முதலமைச்சரின் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி.

அதேபோல சகோதரிகளுக்கு நகர்ப்புற பேருந்துகளில் பயணத்துக்கு கட்டணம் கிடையாது. அது விடியல் பயணம். பேருந்தை பயன்படுத்தும் ஒவ்வொரு பெண்ணும் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 888 ரூபாய் மிச்சம் பிடிக்கிறார்கள் என்று ஆய்வில் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஏனென்றால் யாரிடமும் இனிமேல் வெளியே போகணும் பஸ்ஸுக்கு காசு கொடு என்று கேட்க வேண்டாம். ‘நீ வெளியே போனா பஸ்ஸு காசு வீணாகும்’ என்று உங்களைப் பார்த்து இனிமேல் யாரும் சொல்ல முடியாது. ‘நீ போனாதான் வீணாகும். நான் போனா வீணா போகாது’ என்று நீங்கள் இனிமே சொல்லலாம். பெண்களின் சுதந்திரம், உரிமை தடுக்கப்படக் கூடாது. ஒரு பெண் கல்லூரிக்கு போகும்போது வேறு ஏதாவது கோர்ஸுக்கு போனால், பஸ்ஸுக்கு காசு வீண் என்று சொல்லுவார்கள். ஆனால் உனக்கு பஸ்ஸுக்கு காசே கிடையாது போய்விட்டு வா என்று சொல்வதுதான் நமது முதலமைச்சரின் விடியல் பயணம்.

பெண்கள் அம்மா வீட்டுக்கு போகணும் என்று நினைத்தால் கூட யாரிடமும் நாம் கை நீட்டி நிற்க வேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய உரிமைகளை நம்முடைய வீடு என்று சூழலை விட்டு, வெளியே அடியெடுத்து வைக்க வா என்று சொல்ல கூடிய பயணத் திட்டம்தான் விடியல் பயணம். இதை உருவாக்கித் தந்தது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. நம்முடைய முதலமைச்சர்.

தி.மு.க. என்றால் இந்துக்களுக்கு எதிரான ஆட்சி என்று தொடர்ந்து சொல்லுவார்கள். ஆனால் நாம் இந்துக்களுக்கு எதிரானவர்கள் இல்லை, கிறிஸ்துவர்களுக்கு எதிரானவர்கள் இல்லை, இஸ்லாமியர்களுக்கு எதிரானவர்கள் இல்லை. யாருக்கும் எதிரானவர்களும் இல்லை. ஆனால் உண்மையிலேயே யார் இந்துக்களுக்கு எதிரானவர்கள் என்றால்... இந்துக்களில் பெரும்பான்மையாக இருக்கக் கூடிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட நம்மை போன்ற மக்களுக்கு, பெண்களுக்கு யார் உரிமை தர மறுக்கிறார்களோ...யார் அவர்கள் படிக்கக் கூடாது என்று தடுக்கிறார்களோ அவர்கள்தான் பெரும்பான்மை இந்துக்களுக்கு எதிரானவர்கள்.

தி.மு.க. நமக்கான உரிமைகளுக்காக தொடர்ந்து பாடுபடுகின்ற இயக்கம். பெண்கள், தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர்களின் குரலாக ஒலித்து வருகிற இயக்கம். உங்கள் வீட்டுப் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்று உழைக்கக்கூடிய இயக்கம் தி.மு.க. உங்கள் வீட்டுப் பிள்ளைகள் படிக்கக்கூடாது என்று இட ஒதுக்கீட்டுக்கு எதிராக வேலை செய்யக்கூடியவர்கள் பா.ஜ.க.வினர்.

அதனால் சாதாரண மக்கள், பெண்கள், சிறுபான்மை மக்கள் இவர்களை எல்லாம் ஒடுக்கக்கூடிய நமக்கு இடையே வெறுப்பை, பிரச்சினைகளை உருவாக்கி இந்த நாடு அமைதியாக இருக்கக்கூடாத நிலையை உருவாக்கி, அடுத்த தலைமுறைக்கு பாதுகாப்பு இல்லாத சூழலை உருவாக்கக் கூடியவர்கள்தான் பா.ஜ.க.வினர். அவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

இந்த நாட்டை பாதுகாக்கக்கூடிய இந்த நாட்டில் உள்ள பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுத் தரும் ஆட்சியை நாம் உருவாக்க வேண்டும்.

இந்த நாட்டிலே கோடிக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை இல்லை. பிரதமரிடமும் பா.ஜ.க. வினரிடமும் கேட்டால் பகோடா போடுங்கள் என்று சொல்கிறார்கள். இதை சொல்வதற்கு நீங்கள் எதற்கு?

சாதாரண மக்களை கொச்சைப்படுத்தக்கூடிய ஆட்சி பா.ஜ.க. ஆட்சி. அதற்கு சரியான பாடத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டிய நேரம் தான் இந்தத் தேர்தல். நம்முடைய நாட்டை பா.ஜ.க.விடம் இருந்து பாதுகாக்கக்கூடிய போர்க்களம்தான் இந்த தேர்தல்.

இங்கே ஜெகன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். புதியம்புத்தூர் இது ஒரு குட்டி ஜப்பான் போல இருக்கும். எந்த வீட்டுக்கு போனாலும் ஒரு தையல் மெஷின் ஓடிக் கொண்டிருக்கும். இங்கே தைக்கப்பட்ட துணிகளை தைக்க மும்பை உள்ளிட்ட இடங்களில் இருந்து வியாபாரிகள் வந்து செல்வார்கள் என்றெல்லாம் சொன்னார். மீண்டும் அந்த நிலையை உருவாக்குவோம். இந்தியா கூட்டணி வெல்லும். நாற்பதும் நமதே நாடும் நமதே.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.

இந்த நிகழ்வில் மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளருமான அனிதா ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, தி.மு.க. மாணவரணி தலைவர் ராஜீவ்காந்தி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட பஞ்சாயத்து தலைவர் பிரம்மசக்தி, ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் பஞ்சு மிட்டாய் விற்பனைக்குத் தடை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

*சென்னை, பிப்.19-*

*பஞ்சு மிட்டாயில் புற்றுநோயை உண்டாக்கும் வேதிப்பொருட்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதால் தமிழ்நாட்டில் பஞ்சு மிட்டாய் விற்பனைக்கு தடை விதிக்கப் படுவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-*

*பஞ்சு மிட்டாயில் புற்றுநோயை உண்டாக்கும் வேதிப்பொருட்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதால் தமிழ்நாட்டில் பஞ்சு மிட்டாய் விற்பனைக்கு தடை விதிக்கப் படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பஞ்சு மிட்டாய் மற்றும் நிறமூட்டப்பட்ட மிட்டாய் வகைகளை அரசு உணவு பகுப்பாய்வு கூடத்தில் ஆய்வு செய்ததில் RhodaminbeB எனப்படும் செயற்கை நிறமூட்டி சேர்க்கப்பட்டது கண்டறியப்பட்டுள்ளதாகவும், இது உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டத்தின் படி தரம் குறைவான மற்றும் பாதுகாப்பற்ற உணவு என உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.*

*உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006 ன்படி RhodamineB எனப்படும் செயற்கை நிறமூட்டியை கொண்டு உணவுப் பொருட்களை தயாரித்தல், பொட்டலமிடுதல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், திருமண விழாக்கள் மற்றும் பொது நிகழ்வுகள் ஆகியவற்றில் பரிமாறுதல் ஆகியவை உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் - 2006-ன் படி தண்டனைக்குரிய குற்றம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும், இது குறித்து ஆய்வு செய்து உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் - 2006-ன் படி கடுமையான நடவடிக்கை எடுக்க உணவு பாதுகாப்பு துறை ஆணையர் அவர்களால் அனைத்து உணவு பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.*

# “நீங்கள் இல்லாமல் இந்த இயக்கம் கிடையாது”!

## சிவகங்கையில் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நெகிழ்ச்சி!

**திருப்பத்தூர், பிப்.19 -**

**சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் என்.வைரவன்பட்டியில் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் விழா, நேற்று முன்தினம் (சனிக்கிழமை) நடைபெற்றது. இதில் இளைஞர் நலன், விளையாட்டு மற்றும் சிறப்பு செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக முன்னோடிகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பொற்கிழியை வழங்கினார்.**

**அப்போது, ‘நீங்கள் இல்லாமல் இந்த இயக்கம் கிடையாது என்று நெகிழ்ச்சியுடன் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.**



விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:-

16.02.2024 அன்று இரவு மதுரை வந்து, மதுரை விமான நிலையத்திலிருந்து எட்டு மணி அளவில் இங்கே வரும்பொழுது இரவு 10:00 மணி. அண்ணன் பெரியகருப்பன் அவர்கள் பத்து மணி என்றாலும், பரவாயில்லை 2 இடங்களில் கொடி ஏற்ற வேண்டும் என்றார். 10 மணிக்கு யார் அண்ணா இருப்பார்கள் என்று கேட்டேன். வந்து பார்த்தால், ஒட்டுமொத்த மாவட்டமும் திரண்டு நின்றது. 2 இடங்களிலும் மிகப் பெரும் எழுச்சியான வரவேற்பை அளித்த கழக நிர்வாகிகள், தாய்மார்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேசும்போது இளம் தலைவர், சின்னவர் என்றெல்லாம் பல பட்டப் பெயர்களை வைத்து என்னை அழைத்தார்கள். இந்த பட்டப் பெயர்களில் எல்லாம் எனக்கு சுத்தமாக உடன்பாடு கிடையாது. ஆனால், சின்னவர் என்று அழைப்பதில் ஒரு அர்த்தம் இருக்கிறது. ஏனென்றால், உண்மையாகவே நான் மிகச் சின்னவன். அனுபவத்திலும் சரி, வயதிலும் சரி, இந்த அரங்கத்தில் சின்னவன் நான்தான். இளைஞர் அணிச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர், இப்போது அமைச்சர் இதெல்லாம் நிரந்தரம் கிடையாது. இதெல்லாம் இன்றைக்கு வரும் நாளைக்கு போய்விடும். நான் எப்பொழுதும் உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருக்க வேண்டும் என்றே ஆசைப்படுகிறேன், அதுதான் நிரந்தரம்.

“உங்கள் வீட்டு மாப்பிள்ளை. மாப்பிள்ளைக்குதான் எப்பொழுதும் கூடுதலாக கவனம், சிறப்பு, பாசத்தைக் கொடுக்க வேண்டும்” என்று அண்ணன் பெரிய கருப்பன் அவர்கள் பேசும்போது சொன்னார். அதிலும்கூட எனக்கு உடன்பாடு இல்லை. மருமகளாக இருந்தாலும், நீங்கள் கூடுதல் கவனம் கொடுக்க வேண்டும், கூடுதல் பாசம் கொடுக்க வேண்டும். இந்த சிவகங்கை மாவட்டம், அதையும் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். எப்போதும் உங்கள் வீட்டுப் பிள்ளையாக மக்கள் பணியாற்றுவேன் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

சிவகங்கை மாவட்டத்திற்கு அடிக்கடி வருகிறேன் என்று அண்ணன் சேங்கை மாறன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார். நான் அமைச்சராக பொறுப்பேற்றது 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 14ஆம் தேதி. அமைச்சர் பொறுப்பை ஏற்று, நான் சுற்றுப்பயணம் மேற்கொண்ட முதல் மாவட்டம் இந்த சிவகங்கை மாவட்டம்தான். உங்களுடைய வாழ்த்துக்களைப் பெற்று விட்டுத்தான் நான் இந்த அமைச்சர் பொறுப்பையே ஏற்றுக்கொண்டேன். இப்பொழுது மீண்டும் வந்திருக்கின்றேன்.

### பொற்கிழி கொடுக்கவேண்டும் மறந்து விடாதீர்கள் என்று சொல்லிக் கொண்டே இருப்பார்!

மாவட்டக் கழகம் சார்பாக கழகத்திற்காக உழைத்த 1,500 மூத்த முன்னோடிகளுக்கு தலா 20,000 ரூபாய் பொற்கிழி, சேலை, வேட்டி மற்றும் 5,000 ரூபாய் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை இந்நிகழ்ச்சியில் வழங்குவதில் மிகுந்த பெருமை அடைகின்றேன், மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த நிகழ்ச்சி மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்ட மழையால் இரண்டு முறை திட்டமிடப்பட்டு ரத்து செய்யப்பட்டது.

சட்டப்பேரவையாக இருந்தாலும் சரி, வேறு எங்காவது இருந்தாலும் சரி, என்னை பெரிய கருப்பன் அண்ணன் பார்த்தால், அவர் என்னிடம் கேட்கின்ற முதல் கேள்வி எங்களுக்குத் தேதி கொடுங்கள், பொற்கிழி கொடுக்கணும் என்பதுதான். சட்டப்பேரவையில் எனக்கு அடுத்த இருக்கை, அண்ணன் ரகுபதி அவர்களுடையது. அடுத்த இருக்கை அண்ணன் பெரியகருப்பன் அவர்களுடையதுதான். பொற்கிழி கொடுக்க வேண்டும் மறந்து விடாதீர்கள் என்று அங்கேயும் சொல்லிக்கொண்டே இருப்பார்.

“அண்ணன், நாடாளுமன்ற தேர்தல் வருகிறது. பிரச்சாரத்திற்கு வரும்போது கொடுத்துவிடலாம்” என்று நான் சொன்னேன். “அய்யய்யோ அதுவும் இதுவும் ஒன்றும் கிடையாது. கழக மூத்த முன்னோடிகள் எல்லாம் கண்டிப்பாக உங்கள் கைகளால் வாங்க வேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் வந்தே ஆக வேண்டும்” என்றார். இப்போது கூட சட்டமன்றக் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கிறது.

இரண்டு நாட்கள் விடுமுறை. இன்றைக்கு இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு, இன்றைக்கு நள்ளிரவு திருநெல்வேலி சென்று, நாளை காலை திருநெல்வேலியில், 2 கழகக் குடும்பங்களின் திருமண விழா நிகழ்ச்சி. அதன் பிறகு மதுரையில் அரசு நிகழ்ச்சி. அதன் பிறகு சென்னைக்குச் சென்று திரும்பவும் சட்டமன்றத் தொடரில் கலந்துகொள்ள வேண்டும். இந்த இரண்டு நாள் இடைவெளி கிடைத்தவுடன், அண்ணன் என்னிடம் கண்டிப்பாக நீங்கள் சிவகங்கை வந்துதான் ஆக வேண்டும் என்று என்னை அழைத்து வந்திருக்கிறார். உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பைக் கொடுத்திருக்கின்றார். அதற்கு இந்த நேரத்தில் நன்றி.

### அன்புக் கட்டளை ஒன்றே ஒன்றுதான்!

கடந்த ஒரு வருடமாகவே தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், எந்த மாவட்டக் கழகச் செயலாளராக இருந்தாலும், எந்த அமைச்சராக இருந்தாலும், எந்த இளைஞர் அணி நிர்வாகிகளாக இருந்தாலும் `எங்களுடைய வீட்டு நிகழ்ச்சிக்கு வாருங்கள், கழக நிகழ்ச்சிக்கு வாருங்கள்’ என்று என்னிடத்தில் தேதி கேட்பார்கள். அப்பொழுதெல்லாம் அவர்களிடம் நான் சொல்கின்ற அன்புக் கட்டளை ஒன்றே ஒன்றுதான். “உங்கள் மாவட்டத்திற்கு வருகிறேன். எத்தனை நிகழ்ச்சிகள் என்றாலும் கலந்துகொள்கின்றேன். ஆனால் என்னுடைய மனதிற்கு திருப்தியாக இருக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியை, நீங்கள் நடத்தினீர்கள் என்றால் வருகிறேன்” என்று சொல்வேன். அது என்ன நிகழ்ச்சி என்றால், “கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளை அழைத்து பொற்கிழி வழங்கி அவர்களை கௌரவப்படுத்த வேண்டும். அப்படி நடத்தினீர்கள் என்றால் வருகிறேன்” என்று சொல்லித்தான், கடந்த ஒரு வருடமாக எந்த மாவட்டத்திற்கு சென்றாலும், கழக மூத்த முன்னோடிகளை சந்திப்பதை ஒரு சிறந்த நிகழ்ச்சியாக நடத்திக் கொண்டிருக்கிறோம்.

தலைமைக் கழகத்தின் சார்பாக அண்ணா அறிவாலயத்தில் இருந்து கலைஞர் அறக்கட்டளையின் பேரில், கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள் தலா எட்டு பேருக்கு மாதாமாதம் 25 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. இதுவரை கொடுத்திருக்கக் கூடிய தொகை கிட்டத்தட்ட ஆறு கோடி ரூபாய். அதுபோல இளைஞர் அணியின் சார்பாக, இளைஞர் அணியின் அறக்கட்டளை மூலமாக மருத்துவ உதவி, கல்வி உதவி என்று செய்துவருகிறோம்.

கடந்த நான்கைந்து மாதங்களில் மட்டும் ஒவ்வொருவருக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபாய் என்று 5 கோடி ரூபாய் அளவிற்கு உதவிகள் செய்திருக்கிறோம். அதுபோல, கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளுக்கு கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 40 கழக மாவட்டங்களுக்கு சென்று 42 கோடி ரூபாய் மதிப்பிலான பொற்கிழிகளை வழங்கியிருக்கிறேன்.

### 25,000 ரூபாய் மதிப்புள்ள பொற்கிழியை உங்களுக்கு வழங்கி இருக்கின்றார்!

அண்ணன் பெரியகருப்பன் அவர்கள் ஏற்கனவே 2007ஆம் ஆண்டு 1,000 பேருக்கு தலா பத்தாயிரம் ரூபாய் மதிப்பிலான பொற்கிழி வழங்கியிருந்தார். இப்போது அதையும் தாண்டி, அனைத்து மாவட்டங்களையும் விட, அதிகமாக 25,000 ரூபாய் மதிப்புள்ள பொற்கிழியை உங்களுக்கு வழங்கி இருக்கின்றார். இனிமேல் நான் அடுத்து எந்த மாவட்டத்திற்கு சென்றாலும், இந்த 25 ஆயிரம் ரூபாய் மற்ற மாவட்டங்களும் கொடுத்தாக வேண்டும். அவர் இங்கே அந்த டார்கெட்டை செட் பண்ணி இருக்கிறார். அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றி.

### நம் கழகத் தலைவர் பாராட்டு!

நம் கழகத் தலைவர் அவர்கள் சில மாதங்களுக்கு முன்பு, அவருடைய தொகுதி கொளத்தூர் தொகுதியில் கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகள் 500 பேருக்கு இதேபோல பொற்கிழி வழங்கினார். தமிழ்நாடு முழுவதும் நான் பயணித்து பொற்கிழி வழங்குவதை, கழகத் தலைவர் அவர்கள் அந்த நிகழ்ச்சியில் பாராட்டிப் பேசினார்கள். “உதயநிதி என்னுடைய மகன், நான் அவருடைய தந்தை என்பதற்காகப் பாராட்டவில்லை. கழகத்தின் தலைவராக ஒரு தொண்டனை, இளைஞர் அணிச் செயலாளரை நான் பாராட்டுகிறேன்” என்றார். கழகத்துக்காக உழைத்த மூத்த முன்னோடிகளும், அவர்களை கௌரவப்படுத்த நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்த மாவட்டச் செயலாளர்களும்தான் அந்தப் பாராட்டுக்கு காரணம். அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு முக்கியமான நேரத்தில் நாம் இங்கே கூடியிருக்கிறோம். இன்னும் ஒரு 50 நாள்களில் நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகிறது, உங்களுக்குத் தெரியும். இன்னும் ஒரு வாரத்தில் தேதி அறிவித்து விடுவார்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், இந்த நாடாளுமன்றத் தேர்தல் மிக மிக முக்கியமான ஒரு சூழலில் நடக்கின்ற தேர்தல். இதை நான் சொல்லத் தேவையில்லை, உங்களுக்கே தெரியும். இருந்தாலும், உங்களுக்கு சிலவற்றை நினைவுப்படுத்த விரும்புகின்றேன். 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் நாம் எதிர்க்கட்சி. தமிழ்நாடு, புதுச்சேரி சேர்த்து நாற்பதுக்கு 39 தொகுதிகளில் நாம் மிகப்பெரிய வெற்றி பெற்றோம்.

லட்சக்கணக்கான வாக்கு வித்தியாசங்களில் தமிழ்நாட்டு மக்கள் நம்மை வெற்றி பெற வைத்தார்கள். அதன்பிறகு உள்ளாட்சித் தேர்தலிலும் எதிர்க்கட்சியாக இருந்த நமக்குத்தான் மக்கள் மிகப்பெரியை வெற்றியைக் கொடுத்தார்கள். அதன் பிறகு 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலும் மக்கள் நம்மை வெற்றிபெற வைத்து ஆட்சியில் அமரவைத்தார்கள். நம்முடைய தலைவர் அவர்கள் முதலமைச்சரா னார்.

இப்போது ஆளுங்கட்சியாக இருந்து நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்கப் போகிறோம். சென்ற நாடாளுமன்றத் தேர்தலை விட ஒரு வாக்கு நாம் குறைவாக வாங்கினால்கூட, எதிர்க்கட்சிகள் என்ன சொல்வார்கள்? `பார்த்தீர்களா, தி.மு.க.விற்கு வாக்குகள் குறைந்து விட்டன. மக்கள் செல்வாக்கு குறைந்துவிட்டது என்று சொல்வார்களா? மாட்டார்களா? இதை நீங்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். எனவே, இது நாடாளுமன்றத் தேர்தல்தானே, ஒன்றிய பிரதமரைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம் என்று எண்ண வேண்டாம்.

### 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு மிக மிக முக்கியம், அடித்தளம்!

இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் நாம் வாங்குகின்ற வாக்குகள்தான் அடுத்து வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு மிக மிக முக்கியம், அடித்தளம்.

கடந்த 9 ஆண்டுகளாக தமிழ்நாட்டை மட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்திக் கொண்டிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு. மொழி உரிமை, கல்வி உரிமை, நிதி உரிமை என அ.தி.மு.க ஆட்சியில் அனைத்து மாநில உரிமைகளையும் ஒன்றிய பா.ஜ.கவிடம் அடகு வைத்துவிட்டார்கள்.

சமீபத்தில் வெள்ளம் வந்தபோது பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 6,000 ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என முதலமைச்சர் அறிவித்தார். நிதி அமைச்சர் வந்தார், உள்துறை அமைச்சர் வந்தார். அவர்களிடம் நமது முதலமைச்சர் பேரிடர் நிவாரண நிதி வழங்குமாறு கேட்டார். ஆனால், இதுவரைக்கும் ஒன்றிய அரசிடமிருந்து ஒரு பைசா கூட வரவில்லை. நாங்கள் என்ன ஏ.டி.எம் மிஷினா என்று ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கேட்டார்கள். அதற்கு, `நாங்கள் என்ன உங்கள் அப்பன் வீட்டுக் காசையா கேட்டோம்’ என்று நான் சொன்னேன்.

உடனே அந்த அம்மாவுக்கு பயங்கர கோபம் வந்து, டெல்லியில் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பை வைத்து, அரை மணி நேரம் பாடம் எடுத்தார்கள். உதயநிதிக்கு மரியாதையாகப் பேச தெரிய வேண்டும் என்று சொன்னார்கள்.

கார்ப்பரேட்டுகளுக்கான அரசாகத்தான் ஒன்றிய பா.ஜ.க அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

“மன்னித்து விடுங்கள் அம்மா. நான் மரியாதையாகவே கேட்கிறேன். உங்கள் மதிப்பிற்குரிய மாண்புமிகு உங்கள் அப்பா வீட்டுக் காசை நாங்கள் கேட்கவில்லை. எங்கள் தமிழ்நாட்டு மக்கள் கட்டியிருக்கக்கூடிய வரிப் பணத்தைத்தான் நாங்கள் கேட்டோம்” என்று நான் மறுநாளே சொல்லிவிட்டேன். நீங்கள் கேட்ட மரியாதையை நாங்கள் கொடுத்து விட்டோம். நாங்கள் கேட்ட வரிப்பணத்தை எப்போது கொடுப்பீர்கள், இதைத்தான் நாம் கேட்கிறோம். தமிழ்நாட்டில் இருந்து ஒரு ரூபாய் வரியாகக் கட்டினால், ஒன்றிய அரசு நமக்குத் திருப்பித்தருவது வெறும் 28 காசு.

கார்ப்பரேட்டுகளுக்கான அரசாகத்தான் ஒன்றிய பா.ஜ.க அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கித் தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால், இதுவரைக்கும் இரண்டு லட்சம் பேருக்குக்கூட வேலைவாய்ப்பைத் தரவில்லை.

2020இல் இந்தியாவை வல்லரசு நாடாக மாற்றிக் காட்டுவேன் என்றும் மோடி சொன்னார். இப்போதும் அதையே திருப்பிச் சொல்கிறார் 2047 ஆம் ஆண்டு நாட்டை வல்லரசு நாடாக மாற்றிக் காட்டுவேன் என்கிறார். இந்த ஒன்பது வருடத்தில் இந்தியாவில் வளர்ந்த ஒரே குடும்பம் யார் என்றால், நரேந்திர மோடி அவர்களின் நெருங்கிய நண்பரான அதானி அவர்களின் குடும்பம்தான். கம்பெனி தொடங்கி, ஆறாவது வருடத்தில் உலக பணக்காரர் பட்டியலில் இரண்டாவது இடம். அதானி ஏர்போர்ட் வந்துவிட்டது, அதானி ரயில்வே ஸ்டேஷன் வந்துவிட்டது, அதானி ஸ்டேடியம் வந்துவிட்டது, அதானி கோர்ட் வந்துவிட்டது. இப்படி அனைத்தையும் தூக்கி அதானி கையில் கொடுத்துவிட்டார்.

### உருட்டல் மிரட்டலுக்கு பயம் கிடையாது!

இதையெல்லாம் யார் உண்மையாக தட்டி கேட்டிருக்க வேண்டும்? அப்பொழுது ஆளும்கட்சியாக இருந்த அ.தி.மு.க தட்டிக் கேட்டிருக்க வேண்டும். ஆனால், கேட்டார்களா? சி.பி.ஐ, இ.டி., ஐ டி ரெய்டு என்று அவர்களை உருட்டி மிரட்டி வைத்திருந்தார்கள். இப்பொழுது நம்மையும் மிரட்டப் பார்க்கிறார்கள். நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். இந்த உருட்டல் மிரட்ட லுக்கு எல்லாம் பயப்படுவதற்கு தி.மு.க ஒன்றும் அடிமை இயக்கம் கிடையாது. எதுவாக இருந்தாலும் சந்திப்போம். நம் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்கும்போது எவ்வளவு கடுமையான நிதிநெருக்கடியில் தமிழ்நாடு இருந்தது என்று உங்களுக்குத் தெரியும்! அப்போது கொரோனா பெருந்தொற்றின் மூன்றாவது அலை. ஆனால் சட்டமன்ற தேர்தலுக்காக சொன்ன வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறார் நம்முடைய தலைவர்.

அதில், ஒரு சில திட்டங்களை மட்டும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். மிக முக்கியமாக, நம்தலைவர் அவர்கள்முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு, அவர் இட்ட முதல் கையெழுத்து மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி திட்டம். இந்த இரண்டரை வருடத்தில் 450 கோடி முறை பெண்கள் கட்டணமில்லாமல் பயணம் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 900 ரூபாய் சேமிக்கிறார்கள். இதுவே வருடத்திற்கு 12 ஆயிரம் ரூபாய்.

மக்களுடன் முதல்வர் திட்டத்தில் இதுவரை 3.50 லட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. 16.02.2024 அன்று கூட அமைச்சர் பெரியகருப்பன் அவர்கள் அவர்களுடைய மாவட்டத்தில் கிட்டத்தட்ட 27 லட்சம் ரூபாய்க்கு, நலத்திட்டங்களைத் தொடங்கி வைத்திருக்கிறார்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும். ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய குழந்தைகள், காலையில் பள்ளிக்கூடத்திற்கு வரும்பொழுது பசியோடு இருக்கக் கூடாது என்பதற்காக, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. 17 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் மூலம் தினம்தோறும் பயன் பெற்று வருகிறார்கள்.

### குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள நம் அரசு இருக்கிறது!

முன்பெல்லாம் காலையில் சீக்கிரம் வேலைக்குச் செல்ல வேண்டிய நெருக்கடியில், குழந்தைகளைப் பசியோடு அனுப்புகிறோமே என்ற சோகத்தில் அனுப்புவார்கள். ஆனால், இன்றைக்கு எங்களுடைய குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்கு நம் திராவிட மாடல் அரசு இருக்கிறது, பள்ளியில் தரமான உணவு கொடுக்கப்படுகிறது, அந்த உணவை சாப்பிட்டு விட்டுத்தான் படிக்கப் போகிறான் என்று தைரியமாக, மகிழ்ச்சியாக அனுப்பி வைக்கிறார்கள். இந்தத் திட்டத்தை அண்டை மாநிலங்களில் இருந்தெல்லாம் வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள். எப்படி இவ்வளவு சிறப்பாக இத்திட்டத்தை செயல்படுத்துகிறீர்கள்! எங்களுடைய மாநிலத்திலும் விரிவுபடுத்த வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போகிறார்கள்.

இந்த திட்டங்களுக்கெல்லாம் முத்தாய்ப்பாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் இருக்கிறது. கிட்டத்தட்ட ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு தலா ஆயிரம் ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறது நம் திராவிட மாடல் அரசு. இவற்றையெல்லாம் நீங்கள் மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அண்ணன் பெரியகருப்பன் அவர்கள் கிட்டத்தட்ட 20 ஆயிரம் ரூபாய் பொற்கிழி, சேலை, வேஷ்டி, வெள்ளியிலான ஒரு மெடல் இதையெல்லாம் கொடுத்திருக்கிறார். இதெல்லாம் உங்களுக்கு நிச்சயமாக உபயோகமாக இருக்கும் பெருமைதான். ஆனால், இதையெல்லாம் விட உங்கள் கழுத்தில் போட்டிருக்கிற கருப்பு, சிவப்பு துண்டைத்தான் நீங்கள் மிகப்பெரிய பெருமையாக கருதுவீர்கள் என்று எனக்கு தெரியும். அதுதான் உங்களுக்குப் பெருமை.

இப்போது கலைஞரின் நூற்றாண்டில் இருக்கிறோம். கலைஞரின் பெருமையை பேசும்போது ஐந்து முறை தமிழ்நாட்டை ஆண்டவர் என்று சொல்கிறோம். அதற்கு யார் காரணம்? நீங்கள்தான் காரணம்.

நீங்கள் இல்லாமல் கலைஞர் கிடையாது. கலைஞர் இல்லாமல் நீங்கள் கிடையாது. கலைஞருக்கும் தொண்டனுக்குமான அந்த உறவுக்கு ஒரு சின்ன சம்பவத்தை உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகின்றேன்.

1976ஆம் ஆண்டு மிசா, எமர்ஜென்சி காலம். அனைத்துத் தலைவர்களும், கழகத்தின் முக்கிய முன்னோடிகள் பலர் கைது செய்யப்பட்டார்கள். நம்முடைய தலைவரும் மிசாவில் கைது செய்யப்பட்டார். கடுங்காவல் தண்டனை அளித்தார்கள். கிட்டத்தட்ட ஒரு வருடம் சிறையில் இருந்தார்.

கழகத்தின் அனைத்து முக்கிய மானவர்களும் கைது செய்யப்பட்ட நிலையில், கலைஞர் மட்டும் சென்னையில் இருந்தார். அப்பொழுது நம் கழகத் தொண்டர்கள் தலைவரைப் பார்ப்பதற்கு அனுமதி கிடையாது. வாடகைக்கு வண்டி கொடுப்பவர்களிடம், தி.மு.க. காரனுக்கு வண்டி கொடுக்கக்கூடாது என்று மிரட்டி வைத்திருந்தார்கள். தொண்டர்கள் சென்னைக்குச் சென்று கலைஞரை சந்திக்க வேண்டும் என்றால், வண்டி கிடையாது. ஆனால், நம் கழகத் தோழர்கள், உடன்பிறப்புகள் நீங்கள் சும்மா இருப்பீர்களா என்ன?

### நடந்தே சென்று கலைஞரைப் பார்த்தவர்கள்!

நாங்கள் திருத்தணிக்குப் போகிறோம், திருப்பதிக்கு போகிறோம், சாமி கும்பிட கோவிலுக்குப் போகிறோம் என்று சொல்லி வண்டி எடுத்துக் கொண்டு திருப்பதி, திருத்தணிக்குச் சென்று மொட்டை போட்டு விட்டு, அங்கிருந்து சென்னைக்குப் போகிறோம் மெரினா கடற்கரையைப் பார்க்க போகிறோம் என்று சொல்லி, அங்கே போய் வண்டியை நிறுத்திவிட்டு, கடற்கரையில் இருந்து கோபாலபுரத்திற்கு நடந்தே சென்று கலைஞரைப் பார்த்தவர்கள் தான் கழகத்தின் மூத்த முன்னோடிகள். நீங்கள் இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இந்த இயக்கம் கிடையாது.

சேலத்தில் மிகப்பெரிய அளவில் இளைஞர் அணி மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்து இருக்கிறோம். ஏழு லட்சம் இளைஞர்கள் கலந்துகொண்ட வெற்றி மாநாடு. கிட்டத்தட்ட ஒரு 2 லட்சம் பேர் மாநாட்டின் திடலுக்குள்ளேயே வர முடியாத அளவிற்கு போக்குவரத்து நெரிசல். உங்களின் வாழ்த்துக்களுடன் தான் அந்த மாநாடு வெற்றி பெற்று இருக்கிறது. அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இது ஏதோ இளைஞர் அணிச் செயலாளராக, அமைச்சராக உங்களை சந்தித்து இந்தப் பொற்கிழியை வழங்க வரவில்லை. தாத்தாவுக்கும் பாட்டிக்கும் ஒரு பேரனின் செய்கின்ற கடமையாகத்தான் இந்த நிகழ்ச்சியைப் பார்க்கின்றேன். இது மாதிரியான நிகழ்ச்சி களில் கலந்து கொள்ளும் பொழுது மிகவும் பெருமையாக இருக்கும் என்பதை பலமுறை மேடைகளில் சொல்லியிருக்கிறேன்.

### நீங்கள் இல்லாமல் இந்த இயக்கம் கிடையாது!

உங்களையெல்லாம் பார்ப்பது மிகப் பெரிய பெருமை. அதே நேரத்தில் கொஞ்சம் பொறாமையாகவும் இருக்கும். பெருமை என்னவென்றால், கழகத்திற்காக உழைத்தவர்கள் நீங்கள்தான். கழகத்தின் ஆணிவேர் நீங்கள்தான். நீங்கள் இல்லாமல் இந்த கட்சி கிடையாது. நீங்கள் இல்லாமல் இந்த இயக்கம் கிடையாது. அதுதான் பெருமை. ஆனால், பொறாமை என்னவென்றால், நான் கலைஞரைப் பார்த்திருக்கிறேன். கலைஞருடைய கூட்டங்களுக்குச் சென்றிருக்கிறேன். கலைஞரின் பேச்சை நேரில் கேட்டிருக்கிறேன். இனமானப் பேராசிரியர் தாத்தா அவர்களின் கூட்டத்திற்குச் சென்றிருக்கிறேன். அவரையும் நேரில் பார்த்திருக்கிறேன். ஆனால், தந்தை பெரியாரை நேரில் பார்த்தது கிடையாது. பேரறிஞர் அண்ணாவை நேரில் பார்த்தது கிடையாது. இங்கு வந்திருக்கக்கூடிய கழகத்திற்காக உழைத்த மூத்த முன்னோடிகளாகிய நீங்கள் தந்தை பெரியாரை நேரில் பார்த்திருப்பீர்கள். அவரோடு போராட்ட களத்திற்கு போய் இருப்பீர்கள் அவரோடு சிறை சென்றிருப்பீர்கள். பேரறிஞரின் அண்ணாவுடன் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருப்பீர்கள் களம் கண்டிருப்பீர்கள். எனவேதான் உங்களையெல்லாம் பார்க்கும்போது எனக்கு பொறாமையாக இருக்கும்.

உங்கள் ஒவ்வொருவரையும் பார்க்கும்போது தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவின் மறு உருவமாக, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் மறு உருவமாக, இனமான பேராசிரியர் தாத்தா அவர்களின் மறு உருவமாகத்தான் பார்க்கின்றேன். எனவே கழகத்தின் மூத்த முன்னோடி களான நீங்கள், உங்கள் கைகளோடு கழக இளைஞர் அணியின் கைகளையும் பிடித்து, எங்களையும் வழி நடத்துங்கள் என்று கேட்டுக் கொண்டு இந்த சிறப்பான வாய்ப்பளித்த அண்ணன் பெரிய கருப்பன் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், ரகுபதி, சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி, மாவட்ட அவைத் தலைவர் கணேசன், மாநில இலக்கிய அணி புரவலர் தென்னவன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் சேங்கை மாறன், மணிமுத்து, மாணவர் அணியின் மாநில துணைச் செயலாளர் பூரண சங்கீதா, மாநில ஆதிதிராவிடர் நலக்குழுவின் துணைச் செயலாளர் மாரியப்பன் கென்னடி, ஐ.டி விங் துணைச்செயலாளர் இலக்குவன், மண்டல இளைஞர் அணிகளை ஒருங்கிணைக்க கூடிய இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, கல்லல் மேற்கு ஒன்றியச் செயலாளர் குன்றக்குடி சுப்பிரமணியம், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினரும், இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், இளைஞர் அணியின் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் சேதுபதி ராஜா, பொற்கோ, பரணி கிட்டு, மதிவாணன், கார்த்திக், முகமத் மஹாதீர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’- பாசிசம் வீழட்டும் - இந்தியா வெல்லட்டும்!

## நாடாளுமன்றத் தொகுதி வாரியாக எழுச்சி பொங்க நடைபெற்ற பரப்புரைக் கூட்டங்கள்!























# ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’- பாசிசம் வீழட்டும் - இந்தியா வெல்லட்டும்!

## நாடாளுமன்றத் தொகுதி வாரியாக எழுச்சி பொங்க நடைபெற்ற பரப்புரைக் கூட்டங்கள்!












அமைச்சர் அர.சக்கரபாணி தலைமை! தே.மதியழகன் எம்.எல்.ஏ. - ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. முன்னிலை!

## கிருஷ்ணகிரியில் ‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ பொதுக்கூட்டம்!

### கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் சிறப்புரை!

கிருஷ்ணகிரி., பிப். 19-

கிருஷ்ணகிரியில் உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் நடந்த பொதுக்கூட்டத்தில் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் பங்கேற்று சிறப்புரையாற்றினார். கிருஷ்ணகிரி டோல்கேட் அருகில் உளள் தேவராஜ் திடலில், கிருஷ்ணகிரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு, மாவட்ட பொறுப்பு அமைச்சரும், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி தலைமை வகித்தார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் தே. மதியழகன் எம்எல்ஏ., கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒசூர் மாநகர மேயரும், ஒசூர் நகர செயலாளருமான எஸ். ஏ. சத்யா வரவேற்புரையாற்றினார். கிருஷ்ணகிரி நகர செயலாளர் எஸ்.கே நவாப் நன்றியுரை ஆற்றினார் கூறினார்.

இந்த கூட்டத்தில் கழக பொதுச்செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் பங்கேற்று சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது : கிருஷ்ணகிரி மாவட்டம் தி.மு.க. கோட்டை. தி.மு.க. தலைமைக்கு கட்டுப்பட்ட மாவட்டம். கிருஷ்ணகிரி மக்களவைத் தொகுதியில் கடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சியை 1.75 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்த நிலையில், ஒரு வேளை இந்த தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் நிறுத்தப்பட்டால் எவ்வளவு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறலாம்

வருகிற நாடாளுமன்றத்தின் வெற்றிக்கு அறிகுறியாக இந்த கூட்டம் நடைபெறுகிறது. இந்தியாவி லேயே இன்றைக்கு ஒரு ஆட்சி அமைதியாக, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடக்கிற ஆட்சி என்றால் அது நமது கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி தான். ஒரே நாடு, ஒரே தேர்தல் மற்றும் பாராளுமன்ற தொகுதி சீரமைப்பு ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். நமது அரசு பல சாதனைகளை செய்து வருகிறது. பெண்களுக்கு இலவச பேருந்து பயண சலுகை, குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1000ம், கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம் மூலம் ரூ.1000, காலை உணவுத் திட்டம் என பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது நமது அரசு.

ஆனால் பா.ஜ.க. வினரோ, நாடாளுமன்ற புதிய கட்டிடம், ராமர் கோயில், கத்தாரில் இந்து கோயில் கட்டியுள்ளோம் என்பது போன்றதை சொல்லி தான் ஓட்டு கேட்க முடியும். ஒன்றிய அரசு கோவில் கட்டியது மட்டும்தான் காட்டுகிறது. மக்கள் திட்டங்களை காட்ட முடியுமா என அமைச்சர் கேள்வி எழுப்பினார்.

இந்த கூட்டத்தில், மாநில மகளிரணி ஆலோசனை குழு உறுப்பினர் டாக்டர்.காஞ்சனா கமலநாதன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் வெற்றிச் செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முருகன், நரசிம்மன், கோவிந்தசாமி, கிருஷ்ணமூர்த்தி, மாநில விவசாய அணி துணை செயலாளர்கள் டேம். வெங்கடேசன் ,அரியப்பன், மாநில மகளிர் ஆணைய குழு உறுப்பினர்

டாக்டர்.மாலதி நாராயணசாமி, மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில சிறுபான்மை நலக்குழு உறுப்பினர் விஜயகுமார், மாவட்ட அவைத்தலைவர்கள் நாகராஜ், யுவராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சந்திரன், சாவித்திரி கடரலசுமூர்த்தி, சின்னசாமி, புஷ்பா சர்ஷேஷ், மாவட்ட பொருளாளர்கள் கதிரவன், சுகுமாறன், தலைமை செயற்குழு

உறுப்பினர்கள் பரிதநவாப், செந்தில், கிருபாகரன், எல்லோராமணி, வீராரெட்டி, கிரிஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலன், நாகராசன், அஸ்லாம், சித்ராசந்திர சேகர், கோதண்டன், ஜெயராமன், முனிராஜ், சீனிவாசன், அப்துல்கலாம், தனலட்சுமி, அருணாபூசன்குமார், ஒன்றிய, செயலாளர்கள் கோவிந்தன்,தனசேகரன், தேங்காய்.சுப்பிரமணி , மகேந்திரன், சாந்தமூர்த்தி, ராஜேந்திரன் , அறிஞர்,

குண.வசந்தரசு , எக்கூர் .செல்வம்,ரஜினிசெல்வம், குமரேசன் கருணாகரன், ரகுநாத், நாகேஷ், பாக்கியராஜ், சின்னராஜ், ஸ்ரீதர், தணிகாசலம், கஜேந்திரமூர்த்தி, சீனிவாசலுரெட்டி, பேரூர் கழக செயலாளர்கள் பாபு , தம்பிதுரை வெங்கடப்பன் , பாபு சிவகுமார், திவாகரன், சீனிவாசன், தஸ்தகீர் மற்றும் பி.டி. அன்பரசன் , மருத்துவர்.தென்னரசு ,

மாவட்ட , மாநகர,ஒன்றிய ,நகர அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள் , துணை தலைவர்கள் , துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் தொண்டர்கள் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## மரக்காணத்தில் 401 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

மரக்காணம், பிப். 19-

மரக்காணத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட நிகழ்ச்சியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்துகொண்டு 27.46லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 401 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆட்சி பொறுப்பேற்ற 33 மாதத்தில் தமிழ்நாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் வழியில் தேர்தல் வாக்குறுதியில் கொடுக்கப்படாத பல்வேறு வாக்குறுதிகளை முதலமைச்சர் செயல்படுத்தி வருவதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் புகழாரம் சூட்டினார்.

முதலமைச்சர் அவர்கள் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதைத் தொடர்ந்து விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் தாலுகாவில் மக்களுடன் முதல்வர் திட்டத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மரக்காணத்தில் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி தலைமை தாங்கினார். தனித்துணை ஆட்சியர் விஸ்வநாதன்அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ஆதிதிராவிடர் நலம், பிற்படுத்தப்பட்டோர் நலம், மாவட்ட சமூக நலத்துறை,மாவட்டம் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, கூட்டுறவுத்துறை, தாட்கோ ,எரிசக்தி துறை, வருவாய் மற்றும் நகராட்சி நிர்வாகம் துறை சார்பில் 401பயனாளிகளுக்கு 27 லட்சத்தி46 ஆயிரத்து 221 ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இல்லங்களிலும் முதலமைச்சரின் திட்டங்களில் ஏதாவது ஒரு வகையில் ஒரு திட்ட மானது சென்றுள்ளதாகவும் அனைத்து தரப்பு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்ற ஒரு முதல மைச்சரை நாம் பெற்றி ருப்பதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் புகழாரம் சூட்டினார்.

இதில்ஒன்றிய பெருந்தலைவர்கள் மரக்காணம் தயாளன், ஒலக்கூர் சொக்கலிங்கம், மாவட்ட துணை சேர்மன் ஷீலா தேவி சேரன், ஒன்றியதுணை சேர்மன் பழனி, பேரூராட்சி மன்ற தலைவர் வேதநாயகி ஆள வந்தார், வட்டபிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் முகுந்தன் ,சமூக நலத்துறை அலுவலர் ராஜம்பாள், மாற்றுத்திறனாளிகள் தங்கவேலு,மாவட்ட கூட்டுறவு இணைபதிவாளர்ய சோதா தேவி,பேரூராட்சிகளின் செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன், நகராட்சி ஆணையர்கள் விழுப்புரம் ரமேஷ், திண்டிவனம் தமிழ் செல்வி,மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் ரமணன்,மரக்காணம் பேரூராட்சி துணைத் தலைவர் பலராமன், மாவட்ட கவுன்சிலர் புஷ்பவள்ளி குப்புராஜ்,மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் செந்தில்குமார், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். மரக்காணம் வருவாய் வட்டாட்சியர் பாலமுருகன் நன்றி கூறினார்.



முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாக நேற்று முன்தினம் (17.02.2024) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், குழந்தைநேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், புதிதாகக் கட்டப்பட்டுள்ள பள்ளி வகுப்பறை கட்டிடங்களை திறந்து வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் கலந்து கொண்டார். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.எம்.மஞ்சுளா, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, கீரமங்கலம் பேரூராட்சித் தலைவர் சிவக்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.




பள்ளிக்கல்வித்துறை அமைச்சர், தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக மாநிலத் தலைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தருமபுரியில் 3’வது மண்டல மாநாட்டைத் தொடங்கிவைத்து தலைமையுரையாற்றினார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி, வெங்கடேஸ்வரன், சதாசிவம், தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக மாநில துணைத் தலைவர் முத்துக்குமார், பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் க.அறிவொளி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சாந்தி, மாவட்டக் கழகச் செயலாளர் பழனியப்பன் ஆகியோர் கலந்துகொண்டார்கள். பேராசிரியர் பர்வீன் சுல்தானா சிறப்புரையாற்றினார். தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருப்பத்தூர் மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 30 ஆயிரம் பெற்றோர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.2.2024) சென்னையில் நடைபெற்ற மியாட் மருத்துவமனையின் 25வது ஆண்டு நிறுவனர் தின விழாவில் கலந்து கொண்டு, அவ்விழாவிற்கான தபால் தலையை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், மியாட் மருத்துவமனை நிறுவனர் டாக்டர் பி.வி. மோகன்தாஸ், தலைவர் திருமதி மல்லிகா மோகன்தாஸ், நிர்வாக இயக்குநர் டாக்டர் பிரித்வி மோகன்தாஸ், தபால் துறை இயக்குநர் மேஜர் எம். மனோஜ் மற்றும் மருத்துவமனை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.2.2024) தலைமைச் செயலகத்தில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் மழை வெள்ள பாதிப்புக்கு நிரந்தர தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட சென்னை வெள்ள இடர் தணிப்பு மற்றும் மேலாண்மை குழுவின் தலைவர் வெ. திருப்புகழ், (ஓய்வு) அவர்கள் சந்தித்து "2023 Flood Issues and Recommendations அறிக்கையினை அளித்தார். உடன் பேராசிரியர் ஜனகராஜன், ஓய்வு பெற்ற பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் டி. காந்திமதிநாதன், ஐஐடி பேராசிரியர்கள் இளங்கோ, பாலாஜி, அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் பிரதீப், பெருநகர சென்னை மாநகராட்சி தலைமை பொறியாளர் எஸ். ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

# 36 திருக்கோயில்களில் ரூ.592.38 கோடி மதிப்பில் 43 புதிய திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, பிப்.19 - இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 36 திருக்கோயில்களில் ரூ.592.38 கோடி மதிப்பீட்டிலான 43 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.02.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 592 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 36 திருக்கோயில்களில் கட்டப்படவுள்ள புதிய இராஜகோபுரம், திருமண மண்டபங்கள், பக்தர்கள் தங்கும் விடுதி, வணிக வளாகங்கள், பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம், பல்நோக்கு மண்டபம், வசந்த மண்டபம், முடிகாணிக்கை மண்டபம், கலையரங்கம், அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு, பக்தர்களுக்கு ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிகள், வள்ளலார் சர்வதேச மையம் அமைத்தல், ஆன்மிக கலாச்சார மையம், உதவி ஆணையர் அலுவலகம், பள்ளி மற்றும் கல்லூரி வகுப்பறை கட்டடங்கள், ஓதுவார் பயிற்சிப் பள்ளி மற்றும் பெண்கள் தங்கும் விடுதி போன்ற 43 புதிய திட்டப் பணிகளுக்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

இந்து சமய அறநிலையத் துறையானது அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்று சிறப்புமிக்க திட்ட செயலாக்கம், 1,379 திருக்கோயில்களில் குடமுழுக்கு, திருத்தேர்களை பழுது பார்த்து வீதிஉலா, திருக்குளங்களை புனரமைத்தல், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல், அன்னதானத் திட்டம் விரிவாக்கம், மலைத் திருக்கோயில்கள் மற்றும் முக்கிய திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் அமைத்தல், புதிய கல்வி நிறுவனங்கள் தொடக்கம், ஒருகால பூஜை திட்டம் விரிவாக்கம், துறையின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை செம்மையாக செயல்படுத்தி வருவதோடு, சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகளும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயிலில் 159 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்களுக்கு ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகள் அமைக்கும் பணிகள்; திண்டுக்கல் மாவட்டம், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 106.91 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருந்திட்ட வளாகத்தில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரியில் வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் நூலகம் கட்டும் பணிகள்; கடலூர் மாவட்டம், வடலூர், திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் 99.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கும் பணிகள்; விருதுநகர் மாவட்டம், இருக்கன்குடி, மாரியம்மன் திருக்கோயிலில் 65.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முகப்பு தோரண வாயில்கள் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல், முடிக்காணிக்கை மண்டபம் விருந்து மண்டபங்கள் மற்றும் கலையரங்கம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் பணிகள்;

சென்னை, மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயிலில் 28.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஆன்மிக கலாச்சார மையம்; தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 19.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடற்கரையில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி; மதுரை மாவட்டம், அழகர் கோயில், கள்ளழகர் திருக்கோயிலில், 12.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கள்ளந்திரி, பூவக்குடி கிராமத்தில் உள்ள திருக்கோயிலுக்குச் சொந்தமான காலியிடத்தில் திருமண மண்டபம் மற்றும் திருக்கோயில் வளாகத்திலுள்ள மேற்குப்புற கோட்டைச் சுவர் திரும்பக் கட்டும் பணிகள்; காஞ்சிபுரம், ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள சென்னை, ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிக்கு 11.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வகுப்பறைக் கட்டடம்;

நாமக்கல், நரசிம்மசுவாமி திருக்கோயிலில் 9.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள திருமண மண்டபம்; தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், நாகேஸ்வரசுவாமி திருக்கோயிலில் 8.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பக்தர்கள் தங்கும் விடுதி; சென்னை, பூங்காநகர், முத்துக்குமாரசுவாமி தேவஸ்தான திருக்கோயிலில் 5.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வணிக வளாகம்; கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலை, சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 5.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வசந்த மண்டபம் மற்றும் பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம்; கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை, ஸ்ரீதேவி குமாரி மகளிர் கல்லூரியில் 5.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வகுப்பறைக் கட்டடம்; தேனி மாவட்டம், கம்பம், கம்பராயப்பெருமாள் திருக்கோயிலில் 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள திருமண மண்டபம்;

வேலூர் மாவட்டம், பேரிப்பேட்டை, காளியம்மன் திருக்கோயிலில் 3.6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வணிக வளாகம்; திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல், காளகத்தீஸ்வரர் திருக்கோயிலில் 3.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள திருமண மண்டபம்; கள்ளக்குறிச்சி மாவட்டம், ஆதிதிருவரங்கம், அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் 3.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருமதில் திரும்ப கட்டும் பணி; தஞ்சாவூர் மாவட்டம், சுவாமிமலை, சுவாமிநாதசுவாமி திருக்கோயிலில் 3.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின்தூக்கி அமைக்கும் பணி; கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை, மாசாணியம்மன் திருக்கோயிலில் 3.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்கள் ஓய்வு மண்டபம் மற்றும் வரிசைத் தடுப்புகள் அமைக்கும் பணி; இராமேஸ்வரம், இராமநாதசுவாமி திருக்கோயிலில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பாதுகாப்பு சுவர் மற்றும் பர்வதவர்த்தினி அம்மன் பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் கட்டப்படவுள்ள வகுப்பறைக் கட்டடங்கள்;

தூத்துக்குடி மாவட்டம், குலசேகரன்பட்டினம், முத்தாரம்மன் திருக்கோயிலின் உபகோயிலான விண்ணவரம் பெருமாள் திருக்கோயிலில் 2.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள திருமண மண்டபம்; சென்னை, தங்கசாலை தெரு, ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலில் 2.64 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வணிக வளாகம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், மாரியம்மன் திருக்கோயிலில் 2.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஓதுவார் பயிற்சி பள்ளி மற்றும் பெண்கள் தங்கும் விடுதி; சென்னை, தேனாம்பேட்டை, பாலசுப்பிரமணிய சுவாமி மற்றும் ஆலையம்மன் திருக்கோயிலில் 2.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வணிகவளாகம்; கள்ளக்குறிச்சி மாவட்டம், பரிக்கல், லட்சுமிநரசிம்மசுவாமி திருக்கோயிலில் 2.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கல் மண்டபம்;

சென்னை, மயிலாப்பூர், திருவள்ளுவர் திருக்கோயிலில் 2.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள அர்ச்சகர் மற்றும் பணியாளர் குடியிருப்பு, வாகன நிறுத்தும், பொதுக்கழிப்பிடம் அமைக்கும் பணிகள்; காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், நாகேச்சரசுவாமி திருக்கோயிலில் 1.99 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வணிக வளாகம்; விழுப்புரம் மாவட்டம், பெருவளூர், கோட்டீஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் 1.97 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள திருமண மண்டபம்; கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம், தாணுமலையான் சுவாமி திருக்கோயிலில் 1.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வணிக வளாகம்; திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, முள்ளாட்சி மாரியம்மன் திருக்கோயிலில் 1.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள திருமண மண்டபம்; கோயம்புத்தூர் மாவட்டம், பூண்டி, வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயி லில் 1.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பக்தர்கள் தங்கும் கூடம்; கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சியில் 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள உதவி ஆணையர் அலுவலகம்; சென்னை, தங்கசாலை தெரு, பிரசன்ன விநாயகர் திருக்கோயிலில் 1.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வணிக வளாகம்; தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல், தேசநாதீஸ்வரர் திருக்கோயிலில் 1.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஐந்து நிலை இராஜகோபுரம்; சென்னை, வேளச்சேரி, தண்டீஸ்வரர் திருக்கோயிலில் 1.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பல்நோக்கு மண்டபம்; செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர், நந்தீஸ்வரர் திருக்கோயிலில் 1.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வணிக வளாகம் என மொத்தம் 36 திருக்கோயில்களில் ரூ.592.38 கோடி மதிப்பீட்டிலான 43 புதிய திட்டப் பணிகளுக்கான கட்டுமானப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், தலைமைப் பொறியாளர் பி.பெரியசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். காந்தி, சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபுசங்கர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.2.2024) முகாம் அலுவலகத்தில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ஆதவ் அர்ஜுனா சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

## தக்கலை தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தக்கலை தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.ஆர்.ரமேஷ்பாபு அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற வழக்கறிஞர் **ச. சுந்தர் சிங்,** (81சி, வலியவீட்டு விளாகம், கப்பியறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் மாவட்டம் 604 408) அவர்கள் தக்கலை தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றி யக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 17.02.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர், தி.மு.க.

### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

## திருநெல்வேலி மாநகரம் 1 மற்றும் 15வது வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி மாநகரம், தச்சநல்லூர் பகுதி, 1வது வட்டச் செயலாளர் பால்கட்டளை பே.முருகன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ஏ.முத்துராமன்,** (7, சீனியப்பன் திருத்து மேலத் தெரு, தச்சநல்லூர், திருநெல்வேலி) அவர்கள் 1வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

திருநெல்வேலி பேட்டை பகுதி, 15வது வட்டச் செயலாளர் முருகன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **எம்.எஸ்.மணிகண்டன்,** (6ஏ, ராஜாஜிபுரம், திருநெல்வேலி டவுண்) அவர்கள் 15வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 17.02.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### தாளடி நெற் பயிரை காப்பாற்ற

# 2 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விட்ட முதல்வருக்கு நன்றி!

## நாகை மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

நாகை. பிப். 19 - நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம் தலைமை தாங்கினார். மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர்.மணிவண்ணன் வரவேற்றார். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள

தீர்மானங்கள் குறித்து மாவட்ட கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என். கௌதமன் பேசினார்.

கூட்டத்தில் மாவட்டக் கழக பொருளாளர் மு. லோகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன் துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், கற்பகம், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பி.டி.சார்லஸ், எஸ்.பன்னீர்செல்வம், இல. பழனியப்பன், கோ.சிவக்குமார், உமாசெந்தாமரை, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், ஆர். டி.எஸ்.சரவணன், மகா.குமார், ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், சோ.பா.மலர்வண்ணன், கே.பழனியப்பன், சிக்கல் என்.ஆனந்த் நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், முகமதுசுல்தான், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் இரா.முருகையன், பி.என்.கார்த்தி, எஸ்.வி.டி.அருள், ப.உதயக்குமார், ஆர்.துரைராஜ், கேஸ்வீ.செந்தில், அ.பாரிபாலன், க.சத்தியமூர்த்தி, ஆர்.ஆர்.குலோத்துங்கன், ஆர். சுரேந்தர், த.தமயந்தி, வ. கமல், எம்.தினேஷ்குமார், எஸ்.வெற்றிவேல், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.எஸ்.அசோக், ஜி.தாமேதரன், தி.கலையரசன், கே. சுரேஷ், எஸ்.டேனியல்சத்தியா மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் இரா.தங்கதுரை, வழக்கறிஞர் அணி சிங்காரவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தீர்மானங்கங்கள்**

சட்ட மன்ற தேர்தலுக்கு முன்பாக அடிமை அ.தி.மு.க. அரசின் பத்தாண்டு கால முறையற்ற நிர்வா கத்தினால் தமிழக மக்கள் பெரிதும் பல இன்னல்களுக்கு ஆளானார்கள். அதன் காரணமாக மக்களின் குறைகளை, துன்பங்களை, துயரங்களை கட்டறிந்திடும் வகையில் கழ கத்தின் முன்னணித் தலைவர்கள் விடியலை நோக்கி ஸ்டாலின் குரல் என்ற தலைப்பில் மக்கள் அ.தி.மு.க. வை ஏன் புறக்கணிக்க வேண்டும் என்ற முன்னெடுப்போடு மக்கள் மதித்தில் பரப்புரை மேற்கொண்டு அந்த தேர்தலுக்கு அடித்தளமிட்டனர். அதே போல் நடைபெற இருக்கின்ற 2024 நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக கடந்த பத்தாண்டு காலத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிற்கு இழைத்த அநீதிகளையும், ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து தற்போது நாடகமாடும் அடிமை அ.தி.மு.க.வின் துரோகங் களையும், மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் முதற்கட்டமாக உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் கழக முன்னணித் தலைவர்கள், நாடாளுமன்ற தொகுதி வாரியாக பரப்புரை மேற்கொள்ள வேண்டும்.

2024 நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்டு, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்களிடம் ஒப்படைக்கப்பட்ட 100 வாக்காளர்கள் குறித்த விவரம் அடங்கிய நோட்டு புத்தகம் மற்றும் ஓ.எம்.ஆர். படிவம் ஆகியவற்றை இதுவரை ஒப்படைக்காமல் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் உடன் ஒப்படைக்க வேண்டும் என்றும், 'கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்ற சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றிய கழகத்தலைவர் அவர்களுக்கும், மாநாடு ஏற்பாடுகளை சிறப்பாக செய்திட்ட கழக இளைஞர் அணி செயலாளர், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்கள், மாவட்ட கழக செலாளர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் அனைவருக்கும் நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு நாகை மாவட்டத்தில் இருந்து அதிக அளவில் இளைஞர்களை கலந்து கொள்ள செய்த ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் மாநாட்டில் கலந்து கொண்டு கழகத்திற்கு வலுச்சேர்த்த இளைஞர் அணியினருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும்,

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் அட்டூழியத்தை வேடிக்கை பார்க்கும் ஒன்றிய அரசை கண்டித்து மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி. மனோகரன் இராமமேஸ்வரத்தில் நடைபெற்ற மீனவர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட நாகை மாவட்டத்தை சேர்ந்த மீனவர்கள் மற்றும் கழகத்தினர் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும் , கழகத் தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க 2024 நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு தேர்தல் அறிக்கை தயாரிப்புக்காக கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தலைமையிலான 11 பேர் கொண்ட குழு வருகையின் போது . நாகை மாவட்டங்கள் உள்ளிட்ட மாவட்டங்களின் கருத்துக்களை கேட்டுப்பெற கருத்து கேட்பு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கழக தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு கலந்து கொள்ளும் கூட்டத்தில் தங்கள் பகுதிகளில் உள்ள வணிகர் சங்கங்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கள், மாணவர் சங்கங்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் அழைத்து பங்கு பெற செய்து கருத்துகளை பதிவு செய்ய உரிய ஏற்பாடுகளை செய்யுமாறு ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களை கேட்டுக் கொள்வது என்றும்,

காவிரி டெல்டா மாவட்டமான நாகை மாவட்டத்தில் காலம் தவறி பெய்த மழையால் கால தாமதமான தாளடி இளம் பயிர்களுக்கு மேட்டூர் அணையில் இருந்து 2 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விடப்பட்டு, தண்ணீர் கடைமடை வரை சென்று சேருகிறதா என்று கண்காணிக்க அதிகாரிகளை நியமித்து தண்ணீர் இன்றி வாடிய 100 சதவித தண்ணீர் தேவையை பூர்த்தி செய்து தாளடி நெற்பயிர்களை காப்பாற்றிய கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வது என்றும்,

முத்தமிழ் கலைஞர் அவர்கள் நன்மதிப்பை பெற்றவரும், இனமான பேராசிரியர் அவர்களின் நம்பிக்கைகுரியவரும், கழகத் தலைவர் தளபதி அவர்களின் அன்பைப் பெற்றவரும் சென்னை அறிவகம், அன்பகம், அண்ணா அறிவாலயம் என தொடர்ந்து கழக அலுவலகத்தில் துணை மேலாளராக பணிபுரிந்தவருமான என்.ஜெயக் குமார் அவர்கள் மறைவுக்கும், நாகை மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் மறைவுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.02.2024) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், டைடல் நியோ லிமிடெட் மூலமாக விழுப்புரம் மாவட்டம், திருச்சிற்றம்பலத்தில் 31 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து, இக்கட்டடத்தின் முதலாவது இடஒதுக்கீடு ஆணையை திருவாளர்கள் SUV Startup Space நிறுவனத்தின் எஸ். யுவராஜ் அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் டாக்டர். வி.ஜெயசந்திர பானு ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.




திருச்சி நாடாளுமன்றத் தொகுதியில் உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல் “பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்” என்ற தலைப்பில் தி.மு.க பொதுக்கூட்டம் புத்தூர் நால்ரோட்டில் நடைபெற்றது. மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி தலைமை தாங்கினார். புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் வரவேற்றுப் பேசினார். தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. சிறப்புரையாற்றினார். உடன் புதுக்கோட்டை முன்னாள் மாவட்ட செயலாளர் பெரியண்ணன் அரசு, அப்துல்லா எம்.பி., எம்.எம்.ஏ.க்கள் எஸ்.இனிகோ இருதயராஜ், டாக்டர் வை.முத்துராஜா, முன்னாள் எம்.எம்.ஏ.க்கள் கவிதைப்பித்தன், அன்பில் பெரியசாமி, கே.என்.சேகரன், மாநகரச் செயலாளர்கள் மேயர் மு.அன்பழகன், மண்டலக் குழுத் தலைவர் மு.மதிவாணன் மற்றும் சென்னை அரங்கநாதன், டோல்கேட் சுப்பிரமணி உள்பட பலர் உள்ளனர்.

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக

# இரா.செல்வப்பெருந்தகை நியமனம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, பிப். 19 -



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இரா. செல்வப்பெருந்தகை நியமிக்கப்பட்டதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு : -

“இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழகத்தின் புதிய தலைவராக நியமிக்கப் பட்டுள்ள சகோதரர் செல்வப் பெருந்தகை அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள்!

**ராஜேஷ்குமார்**

கடந்த 2019ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியைச் சிறப்பாக வழிநடத்தி வெற்றிகள் பல குவித்திட்ட அருமை நண்பர் கே.எஸ்.அழகிரி அவர்களது எதிர்காலப் பணிகள் சிறக்கவும் காங்கிரஸ் சட்டமன்றக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ராஜேஷ்குமார் அவர்களது செயல்பாடுகள் சிறக்கவும் வாழ்த்துகிறேன்.

இணைந்து பயணிப்போம்! #INDIAவை வெற்றி பெறச் செய்வோம்!”

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது தலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்

### தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி

## ஏ.கே.எஸ்.விஜயன் மாமியார் சரஸ்வதி மறைவு!

### கழக நிர்வாகிகள் அஞ்சலி



திருவாரூர், பிப்.19 -

தஞ்சை மாவட்டம் சேது பாவா சத்திரம் ஒன்றியம் முன்னாள் ஒன்றியப் பிரதிநிதியும், குடிவயல்மறைக்கா வலசு ஊராட்சி கிளைக்கழக முன்னாள் செயலாளருமான மறைந்த பெரியசாமியின் துணைவியார் சரஸ்வதி அம்மையார் (வயது 72) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த சரஸ்வதி அம்மையார் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியும், மாநில விவசாய அணி செயலாளருமான ஏ.கே.எஸ்.விஜயனின் துணைவியார் ஜோதி அவர்களின் தாயார் ஆவார்.

அம்மையாரின் மறைவின் தகவல் அறிந்த ஏ.கே.எஸ்.விஜயன் மற்றும் கழக நிர்வாகிகளும், பொது மக்களும் மறைந்த சரஸ்வதி அம்மையாரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

### சென்னை - குரோம்பேட்டை - இலட்சுமிபுரம்

## ஜெ.எம்.கே.எஸ்.அரசு உயர் நிலைப்பள்ளி ஆண்டு விழா!

### தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி.காமராஜ் பங்கேற்பு!

சென்னை, பிப். 19 -

சென்னை குரோம்பேட்டை, இலட்சுமிபுரத்தில் அமைந்துள்ள ஜெ.எம்.கே.எஸ். அரசு உயர் நிலைப் பள்ளியின் ஆண்டு விழா, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி. காமராஜ், 29 வது வார்டு கவுன்சிலர் திருமதி.) சண்முகசுந்தரி ஜெயக்குமார், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் டி.ஜெயக்குமார் ஆகியோர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

மேலும் இவ்விழாவில் லயன்ஸ் கிளப் எஸ்.எம்.சி. உறுப்பினர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவில் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. சென்ற ஆண்டு பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்கள் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ், ரொக்கத் தொகையும் மற்றும் அன்பளிப்பு லயன்ஸ் கிளப் மூலமாக வழங்கப்பட்டது.

கணிதத்தில் முதல் இரண்டு இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு ரொக்கத் தொகை மற்றும் கேடயம் கணித ஆசிரியையால் வழங்கப்பட்டது.

ஆண்டறிக்கையினை பள்ளியின் தலைமையாசிரியை திருமதி. எஸ்.மகேஸ்வரி படித்தார்.

## தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட - மாநில அமைப்பாளர்கள் கூட்டம்!

### மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு

தி.மு.க. மாணவர் அணியின் மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 29-2-2024 - வியாழக்கிழமை, காலை 10.00 மணியளவில், சென்னை, தேனாம்பேட்டை, அண்ணாசாலை, அன்பகத்தில் உள்ள “அண்ணா அரங்கத்தில்”, எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ்காந்தி இணைச் செயலாளர்கள் சி. ஜெரால்டு, எஸ்.மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் ரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம். ஆனந்த், கா. பொன்ராஜ், வி.ஜி. கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ. வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுபோது மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் மட்டும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள்; மாணவர் அணி ஆக்கப் பணிகள் குறித்து.

“அண்ணா அறிவாலயம்,”
சென்னை.
17- 02- 2024

**சி.வி.எம்.பி. எழிலரசன்**, எம்.எல்.ஏ.
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி



வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தலைமையில் வனத்துறையில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களின் கூட்டம் கிண்டி முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது. உடன் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வனத்துறைத் தலைவர் சுப்ரத் மஹபத்தர, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் சீனிவாச ஆர்.ரெட்டி, கூடுதல் தலைமை வனப்பாதுகாவலர் (வன உயிரினம்) நாகநாதன் ஆகியோர் உள்ளனர்.

## திருவள்ளூர் மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனை திறப்பு விழா!

திருவள்ளூர், பிப். 19 –

திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூர் நகராட்சி பகுதியில் 34.50 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கால்நடை மருத்துவமனை திறப்பு விழா நடைபெற்றது.

இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ. பயன்பாட்டிற்கு கட்டடத்தை திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் நகர்மன்ற தலைவர் உஷாராணி ரவி, மண்டல இணை இயக்குனர் செய்தூன், உதவி இயக்குனர், வி.பாஸ்கர், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஜெயபாலன், சண்.பிரகாஷ், பொன்.விஜயன், கால்நடை உதவி மருத்துவர் பிரசாத், சி.அண்ணாகுமார், ஜி.சி.சி.கருணாநிதி, அன்பழகன், எஸ்.கமலக்கண்ணன், ரவி, நாகராஜ், குணசேகரன், சசிகால ஜீவானந்தம், பி.எல்.ஆர்.யோகா, கேட்ரிங் சுரேஷ், சி.தங்கராஜ், அசோகுமார், ஏகாம்பரம், சாலிம், பால்ராஜ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார், மாதவன், மகேஷ்குமார், மேகா,பாஸ்கரன், சுகுமார், தி.வை. சுரேஷ்குமார், எம்.கிருஷ்ணன், செந்தில்வேலு, கோடீஸ்வரன், சந்தோஷ்குமார், வழக்கறிஞர் பிஜி. பரணிதரன், துரைபாபு, ஸ்ரீவாக், பிரசன்னா, சதீஷ்குமார், வி.மகேஷ்குமார், பட்டாணி கார்த்திக் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### இதுவரை ரூ.5 கோடியே 93 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும் 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் மருத்துவம் கல்வி உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ. 5 கோடியே 93 லட்சத்து 90 ஆயிரம். மேலும் தற்போது வங்கியின் வட்டி விகிதம் குறைந்துள்ளதால் 2022, ஜனவரி மாதத்திற்கு வட்டியாக கிடைத்த தொகையில் மருத்துவம் மற்றும் கல்வி உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 17-02-2024 அன்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | ஏ. சிவபெருமாள்,<br>3வது பிளாக், மேற்கு முகப்பேர், அம்பத்தூர், சென்னை–37 | 25,000/– |
| 2. | என்.இ.மோகன்,<br>கோவிந்தாபுரம், பேர்ணாம்பட்டு ஒன்றியம், ஆம்பூர், வேலூர் | 25,000/– |
| 3. | கே.கணேசன்,<br>மகாராஜபேட்டை தெரு, தேவிகாபுரம், திருவண்ணாமலை. | 25,000/– |
| 4. | எம்.ஜோசப்அந்தோணிசகாயராஜ்,<br>அழகப்பசமுத்திரம், பண்ருட்டி, கடலூர் | 25,000/– |
| 5. | எம்.அய்யாவு, புலவன்காடு, ஒரத்தநாடு தாலுக்கா,<br>தஞ்சை மாவட்டம்–614625 | 25,000/– |
| 6. | டி. திராவிடமணி,<br>செல்லூர், பாலையூர் அஞ்சல், மஞ்சக்கொல்லை, நாகை | 25,000/– |
| 7. | மூ.மகாமுனி, தாமரை நகர், காலனி,<br>அரங்கூர், தொட்டியம், திருச்சி மாவட்டம் | 25,000/– |
| 8. | ரெ.இந்திரஜித், உல்லியக்குடி அஞ்சல்,<br>உடையார்பாளையம், அரியலூர் மாவட்டம் | 25,000/ – |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.02.2024) சென்னை, தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி வாயிலாக திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தை ரூ.99,90,00,000/ மதிப்பீட்டில் வள்ளலார் சர்வதேச மையமாக அமைக்கும் பணியை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, கடலூர் மாவட்டம், வடலூர் திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் சன்மார்க்க முறைப்படி சர்வதேச மையம் அமைத்தல் பணிக்கு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர்எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அடிக்கல் நாட்டினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர்ம.இராஜசேகரன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா! கம்மராஜபுரம் கே.எம்.ஆர்.க.குமணன் தலைமை!

# காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியத்தில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.- நெல்லிக்குப்பம் புகழேந்தி சிறப்புரை!

காஞ்சிபுரம், பிப்.19-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் திராவிட மாடல் அரசின் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் இன்று (19.2.2024-திங்கட்கிழமை) மாலை 6 மணியளவில் அவளூர் ஊராட்சியில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு தெற்கு ஒன்றியச் செயலாளர் கம்மராஜபுரம் கே.எம்.ஆர்.க. குமணன் தலைமை வகிக்கிறார். ஊராட்சி மன்றத் தலைவர் சித்ராபாபு, ஒன்றியக் குழு உறுப்பினர் சங்கரி குமார் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர். ஸ்டேண்டட் ஏழுமலை, எஸ்.மனோகரன், ஏ.வேலுமணி, ஜி.சங்கர், டி.கெங்காதரன், டி.லோகநாதன், ஜி.சண்முகம், டி.ராஜேந்திரன், வி.கிருஷ்ணன், எஸ்.எம்.செல்வராஜ், ஜி.குமார் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பேச்சாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., ஜெ.பச்சையப்பன், த.கன்னியப்பன், டி.எல்.தயாளன், ந.வீரராகவன், முனியம்மாள் ராஜகோபால், கோ.கமலக்கண்ணன், ஏ.கே.பரசுராமன், தொ.தட்சணாமூர்த்தி, வே.திருநாவுக்கரசு, மலர்க்கொடிகுமார், திவ்ய பிரியா இளமது, புஞ்சை பூ.வில்லவன், இ.அசோகன், எம்.குமார், டி.அசோக்குமார், எஸ்.நந்தகுமார்,

சுசிலா ராவணன், லட்சுமிசம்பத், ஆ.தினகரன், சன்.தேவராசன், து.கோதண்டராமன், கு.புண்ணியக்கோட்டி, விஜயசுந்தரம், வனிதா கெங்கன், ராஜேஸ்வரி கன்னியப்பன், தி.அன்பழகன், டி.தேவபாலன், உமாமகேஸ்வரிகுமார், நளினி டில்லி பாபு, கலைச்செல்வி சம்பத், ராதாவிஜயகுமார், கீதாராணி சங்கர், செல்விராசி,

ஏ.ராஜவேல், டி.தெய்வ சிகாமணி, ஏ.பாலசுந்தரம், டி.நவீன்குமார், இளைஞர் அணி கே.ராஜா நன்றி கூறுகிறார்.

நூற்றாண்டுகளை கடந்து மருத்துவ சேவையாற்றிட

# மியாட் மருத்துவமனையை வாழ்த்துகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, பிப்.19 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு: -

மருத்துவ நகரமான சென்னையின் பெருமைமிகு அடையாளமாக விளங்கும் மியாட் மருத்துவமனையின் 25 ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்று வாழ்த்தினேன்.

2009ஆம் ஆண்டு நானும் எனது மனைவி அவர்களும் மியாட் மருத்துவமனையில் எங்களது உடலுறுப்புகளைக் கொடையளித்த பசுமையான நினைவுகளோடு, மியாட் மருத்துவமனை நூறாண்டுகளைக் கடந்து மருத்துவ சேவையாற்றிட வேண்டும் என வாழ்த்தினேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## எஸ்.என்.எம்.உபயதுல்லா

பிப்ரவரி 19 (2023)



பள்ளிப் பருவத்திலேயே கழகப் பணியில் தன்னை இணைத்துக் கொண்ட இவர், 1962ஆம் ஆண்டு கலைஞர் தஞ்சை தொகுதியில் போட்டியிட்டபோது, சிறப்பாகப் பணியாற்றி தலைவர் கலைஞரின் அன்பைப் பெற்றவர்.

1973ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வட்டக் கழகப் பிரதிநிதியாக 1987ஆம் ஆண்டு தஞ்சை நகரக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று 2014 வரை தொடர்ந்து 27 ஆண்டுகள் அப்பொறுப்பில் சிறப்பாகப் பணியாற்றியவர். 1

1989, 1996, 2006 ஆகிய ஆண்டுகளில் தமிழக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர், 2006 முதல் 2011 வரை தலைவர் கலைஞர் தலைமையிலான அமைச்சரவையில் வணிகவரித் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

இலக்கிய ஆர்வம் கொண்ட இவர், கடந்த 30 ஆண்டுகளாக இலக்கியவாதிகளைப் போற்றி வருந்தவர்.

2020–ல் தலைமைக் கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "கலைஞர் விருது" வழங்கிச் சிறப்பித்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் 16.02.2024 "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்கீழ் 644 பயனாளிகளுக்கு ரூ.5.50 கோடி மதிப்பில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா உட்பட பலர் உள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில்

# 1,320 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்

பெரம்பலூர், பிப்.19-

மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் பெறப்பட்ட மனுக்களுக்கு தீர்வு கண்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.02.2024 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சி பெரம்பலூர் ஜே.கே.மஹாலில் நேரலையாக ஒளிபரப்பப்பட்டது. இந்நிகழ்வினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க.கற்பகம், தலைமையில் பயனாளிகளுடன் அமர்ந்து கண்டுகளித்தார்.

இந்நிகழ்வில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் 18.12.2023 முதல் 21.12.2023 வரை நகராட்சி பகுதிகளுக்கும், 27.12.2023 முதல் 30.12.2023 வரை பேரூராட்சி பகுதிகளுக்கும் மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டது. இதில் பெறப்பட்ட பல்வேறு துறைசார்ந்த கோரிக்கை மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு 1,320 பயனாளிகளுக்கு பல்வேறு அரசுத்துறைகளின் திட்டங்களின் மூலம் ரூ.2.20 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்தாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் ஏழை,எளிய அடித்தட்டு மக்களின் நலன் கருதி எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியாவிற்கே முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாடு திகழும் வகையில், நமது மாநிலத்தில் செயல்படுத்தும் திட்டங்களைப் பார்த்து அண்டை மாநில முதலமைச்சர்களும் அந்த திட்டங்களை செயல்படுத்தும் வகையில் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராய் விளங்குபவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

பொதுமக்கள் அன்றாடம் அணுகக்கூடிய அரசுத் துறைகளின் அலுவலர்களை ஒருங்கிணைத்து சிறப்பு முகாம் நடத்தி மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெறும் மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 18.12.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம் ஆவாரம்பாளையத்தில் தொடங்கி வைத்தார்கள். முதற்கட்டமாக நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் இந்த முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஒரு நகராட்சி, நான்கு பேரூராட்சிகளிலும் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்கள் சிறப்பாக நடத்தப்பட்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.

அவ்வாறு பெறப்பட்ட மனுக்களின் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் தனி கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுத்து இன்று பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றது.

அதனடிப்படையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் இலவச வீட்டு மனைப்பட்டா, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் உதவித்தொகை உள்ளிட்ட பல திட்டங்களின் மூலம் 735 பயனாளிகளுக்கு ரூ.83,52,500 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், மின்சார வாரியத்தின் மூலம் 169 பயனாளிகளுக்கு புதிய மின் இணைப்பு உள்ளிட்ட சேவைகளும், ரூ.1.75லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், கூட்டுறவுத் துறையின் மூலம் 7 பயனாளிகளுக்கு ரூ.5.26 லட்சம் மதிப்பிலான பயிர்க்கடன், கால்நடை பராமரிப்பு கடனுதவிகளும், குறுசிறு நடுத்தர தொழில் துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ. 89,07,204 மதிப்பிலான சுய தொழில் தொடங்க கடனுதவிகளும், 203 மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை, 14 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.13.45 லட்சம் மதிப்பிலான மோட்டார் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் என பல்வேறு அரசுத் துறைகளின் மூலம் 1,320 பயனாளிகளுக்கு பல்வேறு அரசுத்துறைகளின் திட்டங்களின் மூலம் ரூ.2.20 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்பட்டுள்ளது.

மக்களின் நலன் காக்கும் முதல்வராக, ஏழை எளிய மக்களின் தேவைகளை உணர்ந்து திட்டங்களை செயல்படுத்தும் முதல்வராக இருப்பதால்தான், மனுக்களை எடுத்துக் கொண்டு அரசுத்துறை அலுவலர்களை தேடிச்சென்ற காலத்தை மாற்றி, மக்களைத் தேடி அரசு இயந்திரம் சுழலும் வகையில் இது போன்ற திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகின்றார். இதுபோன்ற திட்டங்களை பொதுமக்கள் முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதிஅ.லலிதா, சார் ஆட்சியர் சு.கோகுல், நகர்மன்றத் தலைவர் திருமதி அம்பிகா இராஜேந்திரன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் திருமதி மீனா அண்ணாதுரை (பெரம்பலூர்), க.இராமலிங்கம் (வேப்பந்தட்டை), திருமதி பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), பேரூராட்சித் தலைவர்கள் திருமதி சங்கீதா ரமேஷ் (குரும்பலூர்), திருமதி பாக்கியலட்சுமி (பூலாம்பாடி), ஏ.எஸ்.ஜாஹிர் உசேன் (லெப்பைக்குடிக்காடு), திருமதி வள்ளியம்மை (அரும்பாவூர்), மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை சி.பாஸ்கர், டாக்டர் அ.கருணாநிதி, நகர்மன்றத் துணைத்தலை வர் து.ஹரிபாஸ்கர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைத்துத் துறைகளின் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

தென்காசி தெற்கு மாவட்டம்

# சுரண்டை நகரக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தென்காசி தெற்கு மாவட்டம், சுரண்டை நகரக் கழகச் செயலாளர் வே.ஜெயபாலன், மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற சுரண்டை நகரக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

பொறுப்பாளர்: **ஆ.கணேசன்**, வ.உ.சி தெரு, சிவகுருநாதபுரம் -627 859. தென்காசி மாவட்டம்.

**பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:**

1. என்.எஸ்.சுப்பிரமணியன், சந்தைபஜார், சுரண்டை,
2. சா.பூல்பாண்டியன், 20வது வார்டு, சுரண்டை.
3. அ. சசிகுமார், 16வது வார்டு, சுரண்டை,
4. ச.ராதாமணி, 26வது வார்டு, கீழச்சுரண்டை,
5. மு. ஜெயராஜ், 22வது வார்டு, வரகுணராமபுரம், சுரண்டை,
6. வைகை அ.கணேசன், 21வது வார்டு, சுரண்டை.
7. ஐ. முத்துக்குமார், 6வது வார்டு, சுரண்டை.
8. ச. மாரியப்பன், 26வது வார்டு, கீழச்சுரண்டை.
9. பு. பரமசிவன், 14வது வார்டு, சுரண்டை.
10. சபினா, 23வது வார்டு, சுரண்டை

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.02.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

கோவை வடக்கு மாவட்டம்

# சரவணம்பட்டி பகுதி 11வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை வடக்கு மாவட்டம், சரவணம்பட்டி பகுதி, 11வது வட்டச் செயலாளர் முகமது நூருதீன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **திருமதி யாஸ்மின் சேட்,** *(3/54, 3வது வீதி, சிவானந்தபுரம், சரவணம்பட்டி, கோவை 641 035.)* அவர்கள் 11வதுவட்டக்கழகப்பொறுப்பாளராகநியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 17.02.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் சந்திரபாடி ஊராட்சியில் ரூ. 12 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட சமுதாய கூடத்தை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் திறந்து வைத்தார். உடன் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.அப்துல்மாலிக், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் குழு உறுப்பினர் செல்வம், ஊராட்சி மன்ற தலைவர் பிரமிளாராஜ்குமார் மற்றும் பலர் உள்ளனர்.


திருப்பத்தூர்
N.வைரவன்பட்டி
பிப்ரவரி 17
மாவட்ட கழகத்தின்
சார்பில் நடைபெற்ற கழக
மூத்த முன்னோடிகளுக்கு
பொற்கிழி வழங்கி சிறப்பித்த
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத்துறை
அமைச்சர்....
உதயநிதி ஸ்டாலின்
அவர்களின் அரசியல் பணி தொடர வாழ்த்துகிறோம்..
கேஆர்.பெரியகருப்பன் B.Com., B.L.,
கூட்டுறவுத்துறை அமைச்சர்,சிவகங்கை மாவட்டகழக செயலாளர்
மு.தென்னவன் MA.,
முன்னாள் அமைச்சர், மாநில இலக்கிய அணி புரவலர்
ஆ.தமிழரசி ரவிக்குமார் B.Com.,
மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர்
M.அன்னாதுரை M.A.,B.L.,
திருமதி.லதாஅன்னாதுரை M.A.,B.L.,
மானாமதுரை ஒன்றியக்குழு தலைவர்
மானாமதுரை மேற்கு ஒன்றிய தி.மு.க

# திராவிட மாடல் அரசு 56

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**








## தமிழ் சூழ் கணினி!

*“சார், கணிப்பொறியே தானாக மொழி பெயர்க்கும் தொழில்நுட்பம் வந்துவிடும் என்கிறார்களே, அப்படி வந்தால் என்ன ஆகும்?” என்று பத்திரிகையாளர் ஒருவர், எழுத்தாளர் சுஜாதாவிடம் கேட்க, அவருக்கே உரிய பாணியில் இப்படிச் சொல்லியிருக்கிறார்: “ஒருவேளை கம்ப்யூட்டரே மொழிபெயர்க்கத் தொடங்கிவிட்டால், உங்களுக்கெல்லாம் வேலை போய்விடும். பரவாயில்லையா?”.*

*இந்த விவாதம் நடந்தது, 1995-ஆம் ஆண்டு, சென்னை அண்ணா பல்கலைக்கழகக் கணிப்பொறித் துறை நடத்திய **‘தமிழும் கணிப்பொறியும்’** என்ற மாநாட்டில்! ‘தமிழ் கம்ப்யூட்டிங்’ என்று சொல்லப்படும் தமிழ்க் கணினி அல்லது கணினித் தமிழ் குறித்து, தமிழ்நாட்டில் நடைபெற்ற முதல் மாநாடு அதுவாகத்தான் இருக்கும் என்கிறார்கள், பல வல்லுநர்கள்.*

*சுஜாதா அவ்வாறு சொல்லி, கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் ஆகப் போகின்றன. ஆனால், இன்று வரையிலும் கணினியால் இயல்பான தமிழில் மொழிபெயர்ப்பை மேற்கொள்ள முடியவில்லை. அதற்கு ஒரு துல்லியத்தைக் கொடுப்பதற்காக உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் கணினித் துறையில் தங்களின் பங்களிப்பைச் செய்து வருகிறார்கள்.*

*‘கணினித் தமிழ்’ எனும் அறிவுக் களத்தில், மொழிபெயர்ப்பு என்பது ஒரு பகுதி மட்டும்தான். ‘கீ போர்டு’ என்று சொல்லப்படும் கணினி விசைப்பலகை தொடங்கி, ‘ஃபான்ட்’ எனப்படும் எழுத்துருக்கள் உருவாக்குவது, தமிழிலேயே நிரல்கள் (புரோகிராமிங்) எழுதுவது, இணையத்தில் தமிழில் மின் இதழ்கள் நடத்துவது என்று பல வளர்ச்சிகளைக் கண்டு, இன்று ‘ஏ.ஐ.’ எனப்படும் ‘ஆர்டிஃபீஷியல் இன்டெலிஜென்ஸ்’ (செயற்கை நுண்ணறிவு) தொழில்நுட்பத்தைக் கணினியில் தமிழின் வளர்ச்சிக்கு எப்படிப் பயன்படுத்துவது என்று விவாதிக்கும் நிலைக்கு இன்று வளர்ந்திருக்கிறது.*

*அந்த வளர்ச்சியை, இனி வரும் காலத்தில் எப்படி முன்னே கொண்டு செல்வது, அப்போது நாம் சந்திக்கும் சவால்களுக்கு எப்படித் தயாராவது, தமிழ்க் கணினியால் ஏற்படப் போகும் வாய்ப்புகள் என்ன என்பது குறித்தெல்லாம் உலக அளவிலான நிபுணர்களோடு கலந்துரையாட, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’ நடத்தியதுதான் **‘கணித்தமிழ்-2024’** மாநாடு.*

### தமிழிணையம்-99..!

*1996-இல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக ஆட்சிக்கு வந்தார். அப்போது அவர், கணினி தொடர்பான கருவிகளின் மீதிருந்த வரியைக் குறைத்தது முதல் மாநிலம் முழுவதும் சுமார் 13 ஆயிரம் சமுதாய இணைய மையங்களை அமைப்பது வரை என கணினித் துறை சார்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.*

*இந்த முன்னேற்றங்களையொட்டியே 1999-ஆம் ஆண்டு பிப்ரவரியில், ‘தமிழ்நெட்-99’ என்ற தலைப்பில் ‘உலகத் தமிழ் இணைய மாநாடு’ நடைபெற்றது. அதில் தமிழ் கீபோர்ட், தமிழ் எழுத்துருக்கள் தொடர்பான பிரச்சினைகள் சார்ந்து விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்த மாநாட்டில் மலேசியா, இலங்கை, சிங்கப்பூர், மொரிஷியஸ், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நார்வே, அயர்லாந்து, குவைத் எனப் பல நாடுகளிலிருந்தும் கணினி நிபுணர்கள், தமிழ் ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.*

*அந்த மாநாட்டில் பேசிய கலைஞர் அவர்கள், “தமிழக அரசு பிரம்மாண்டமான முறையில் தகவல் புரட்சியை மக்களிடத்திலே எடுத்துச் செல்வதில் தீவிரமாக இருக்கிறது. தமிழ்நாட்டு நிர்வாகத்தின் அனைத்துத் துறைகளிலும் கணிப்பொறியை நுழைத்திட, தமிழக அரசு திட்டமிட்டுச் செயல்படுகிறது. இம்மாநாடு அங்கீகரிக்கும் மென்பொருட்களைத்தான் தமிழக அரசு இனிமேல் வாங்கும் என்ற உறுதியையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார். அந்த உறுதிமொழியும் செயல்படுத்தப் பட்டது. அந்த மாநாட்டின் விளைவாக உருவானது தான் ‘தமிழ் இணையப் பல்கலைக்கழகம்’. தற்போது அது, ‘தமிழ் இணையக் கல்விக் கழகம்’ என்று அறியப்படுகிறது.*

### வெள்ளி விழாவில் புதிய பாதை...

*‘தமிழிணையம்-99’ மாநாடு நடைபெற்ற 25-வது ஆண்டு இது. அதனைக் கொண்டாடும் வகையில், நம் கழக அரசு 2023-2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், ‘தமிழ்க் கணினி பன்னாட்டு மாநாடு’, 2024 பிப்ரவரியில் தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலம் நடத்தப்படும் என்று அறிவித்தது. அதன் அடிப்படையில், பிப்ரவரி 8-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை, சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் சிறப்பாக நடைபெற்று முடிந்திருக்கிறது.*

*‘தமிழிணையம்-99’ மாநாட்டுக்குப் பிறகான காலகட்டத்தில் தொழில்நுட்பம் அடைந்திருக்கும் வளர்ச்சி அபரிமிதமானது. செயற்கை நுண்ணறிவு குறித்து கடந்த நூற்றாண்டின் இறுதியிலேயே நாம் பேசத் தொடங்கிவிட்டாலும், வெகு சமீபமாகத்தான் அது முழுவீச்சில் களம் கண்டிருக்கிறது. எனவே, வளர்ந்து வரும் இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் தமிழுக்கான இடத்தினை வலுப்படுத்த வேண்டும் என்பதுதான் ‘கணித்தமிழ் -2024’ மாநாட்டின் நோக்கமாக இருந்தது.*

### நல்ல தமிழ், இனி நான்கு..!

*நம் ‘திராவிட மாடல் அரசு’ ஏற்கெனவே அரசுப் பள்ளிகளில் ‘நான் முதல்வன்’ திட்டம் மூலம் கோடிங், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட கணினித் தொழில்நுட்பங்கள் குறித்து அறிமுகப்படுத்தி வருவது அனைவரும் அறிந்ததே. அதிலிருந்தும் இன்னும் முன்னே செல்ல வேண்டும் என்பது, மாநாட்டின் நோக்கமாக இருந்ததால், அந்த இலக்குக்கு ஏற்ப ஆங்கிலத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுவரும் ‘நேச்சுரல் லாங்குவேஜ் பிராசஸிங் டூல்ஸ்’ (Natural Language Processing Tools), செயற்கை நுண்ணறிவு, இயந்திர வழிக் கற்றல் (Machine Learning), இயந்திரவழி மொழியாக்கம் (Machine Translation), உணர்வுப் பகுப்பாய்வு (Sentimental Analysis), மொழி மாதிரிகள் (Large Language Model), பேச்சுகளைப் புரிந்துகொள்ளல் (Automatic Speech Recognition) உள்ளிட்ட தொழில் நுட்பங்களை, தமிழில் உருவாக்கும் முயற்சிகள் குறித்து, இந்த மாநாட்டில் கருத்துரைகள், விவாதங்கள், ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தல் போன்ற வடிவங்களில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.*

*கூடுதலாக, இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் என இரண்டு விதமாக ‘ஹேக்கத்தான்’ எனும் நிரலாக்கப் போட்டியும் நடத்தப்பட்டது. இந்தப் போட்டியின் வழியாக, இளம் தொழில்நுட்ப வல்லுநர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களின் முயற்சிகளுக்குப் பரிசுகள் வாயிலாக அங்கீகாரம் தந்து, அவர்களுக்கு வேண்டிய வழிகாட்டுதலும் வழங்கப்பட்டது. போலவே, மொழித் தொழில்நுட்பங்கள் தொடர்பான அதிநவீனத் தயாரிப்புகள், திட்டங்கள், புதிய சிந்தனைகள் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் விதமாக கண்காட்சியும் அமைந்திருந்தது. இந்தக் கண்காட்சியில் தொழில் துறையைச் சேர்ந்தவர்கள், புத்தொழில் (STARTUP) நிறுவனத்தினர் ஆகியோர் பங்கேற்றனர்.*

*தமிழ் மொழியைக் காப்பதற்கும், அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதற்கும் மிகப்பெரிய வாய்ப்பாக இந்த மாநாடு நடைபெற்றிருக்கிறது. தாய்மொழிக்காக இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் செய்யாத முன்னெடுப்பு இது. ஆம்... இனி முத்தமிழ் அல்ல... இயல், இசை, நாடகம், கணினி என நால் தமிழ் என்று பெருமிதம் கொள்வோம்!*

**...சாதனை தொடரும்**

### ‘கணித்தமிழ்-2024’ பன்னாட்டு மாநாட்டின் சில சிறப்பம்சங்கள்...

- **2** மாநாட்டுச் சிறப்பு மலர்கள் ‘கணித்தொகை’, ‘கணிக்கோவை’ என்ற தலைப்புகளில் வெளியிடப்பட்டன.
- **4** அரங்குகளில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அந்த நான்கு அரங்குகளுக்குக் கணினித் தமிழ் முன்னோடிகளான டாக்டர் வ.செ.குழந்தைசாமி, நா.கோவிந்தசாமி, மு.அனந்தகிருஷ்ணன், எம்.ஆண்ட்டோ பீட்டர் ஆகியோரின் பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன.
- **7** பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன.
- **10** நாடுகள் மற்றும் **9** மாநிலங்களில் இருந்து **62** அறிஞர்கள் பங்குகொண்டனர்.
- **31** ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.
- **40** கல்லூரிகள் பங்கேற்றன.
- **43** நிகழ்வுகள் நடைபெற்றன.
- **44** கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.
- **269** மாணவர் குழுக்கள் நிரலாக்கப் போட்டியில் கலந்துகொண்டன.
- **1,000** மொழி அறிஞர்கள், தொழில்நுட்ப வியலாளர்கள், கல்வி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் கலந்துகொண்டன.
- **2,000**-க்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்றனர்.

---

## ஒன்றிய அரசின் திட்டத்தில் எத்தனை ஓட்டைகள்?

‘ஆயுஷ்மான் பாரத்’ என்ற ‘பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா’ சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் 2018-ஆம் ஆண்டில் மோடி அரசால் அறிமுகப்படுத்தப் பட்டது. குடும்பம் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ.5 லட்சம் வரையில் காப்பீட்டுச் சேவைகள் கிடைக்கும் என்பது இத்திட்டத்தின் இலக்கு. இத்திட்டத்தில் 7.5 லட்சம் பயனாளிகளின் பதிவுகள், ஒரே செல்போன் எண்ணுடன் இணைக்கப்பட்டு, மோசடி நடைபெற்றுள்ளதாக சி.ஏ.ஜி அறிக்கை சமீபத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

அதற்கெல்லாம் உரிய மறுப்போ, விளக்கமோ கொடுக்க முடியாமல் திணறியது ஒன்றிய பா.ஜ.க அரசு. இப்போது மேலும் சில புள்ளிவிவரங்கள் வெளியாகி, அத்திட்டத்தின் நோக்கத்தையே கேள்விக்குட்படுத்தியிருக்கின்றன. அரசு மருத்துவமனைகளைவிட குறைவான எண்ணிக்கையில்தான் தனியார் மருத்துவமனைகளில் இத்திட்டத்தைப் பயனாளிகளால் பயன்படுத்த முடிந்திருக்கிறது என்று ‘தி ஸ்கிரால்’ ஊடகம் கூறியிருக்கிறது. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தனியார் மருத்துவ மனைகள் தயக்கம் காட்டுகின்றன என்பதைத்தான் அச்செய்தி கூறுகிறது.

அதுமட்டுமல்ல, கொரோனா பெருந்தொற்று காலத்தில்கூட 11.9% நோயாளிகள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் காப்பீடு வசதிகளைப் பெற முடிந்திருக்கிறது. பேரிடர் காலத்தில்கூட உதவாத இத்திட்டத்தைத்தான் பா.ஜ.க.வினர், உலகிலேயே மிகப்பெரிய காப்பீட்டுத் திட்டம் என்று புகழுரைகள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

---

## ஃப்ளாஷ்பேக்



### நினைவஞ்சலிக்கு வருகை!

கும்பகோணம் பெருநகர தி.மு.க செயலாளராக கழகப் பணியாற்றி, பேரறிஞர் அண்ணா அவர்களிடமும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடமும் நன்மதிப்பைப் பெற்றவர் என் தந்தை மிசா சு.பத்மநாபன். கலைஞர் அவர்களின் உற்றநண்பர். 1989-ஆம் ஆண்டு கழகம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த சில நாட்களில் என் தந்தை மறைந்தார். என் தந்தை அவர்களின் மறைவையொட்டி, எங்களது இல்லத்துக்கு வருகை தந்த அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்கள் நினைவஞ்சலி செலுத்தினார். அருகில், குடந்தை பெருநகர கழகச் செயலாளர் மிசா இரா.துரை, பொதுக்குழு உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் அவர்கள், நான் மற்றும் கழக உடன்பிறப்புகள் ஆகியோர் உள்ளோம்.



தமிழழகன்

**-சு.ப.தமிழழகன், மாநகரக் கழகச் செயலாளர், துணை மேயர், கும்பகோணம் மாநகராட்சி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033 -24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### இணையற்ற வீரனுக்குத் தடையா?

**1948-இல் பாரதிதாசனின் ‘இரணியன் அல்லது இணையற்ற வீரன்’ நாடகம் தடை செய்யப்பட்டது. தடைக்கு எதிராக பலர் இரணியன் வேடமணிந்து கைதாகினர். அதன் பிறகு இந்நாடகத்துக்கான வரவேற்பு பெரிதும் அதிகமானது. தொன்மங்களில் கொடியவனாகச் சொல்லப்பட்ட இரணியனை, திராவிட இயக்க வீரனாக சமூக ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்துப் போராடும் போராளியாகச் சித்தரித்து நாடகத்தை எழுதியிருந்தார் பாரதிதாசன். 1934-இல் சென்னை விக்டோரியா அரங்கில் தந்தை பெரியார் தலைமையில் குத்தூசி குருசாமி இரணியனாக நடித்து அரங்கேற்றப்பட்ட நாடகம் இது.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 393




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131